# ரெட்டி மலர்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly


| | | | |
|---|---|---|---|
| மலர் : XVIII | இதழ் : 7 | அக்டோபர் 2024 | விலை. ரூ.15/– |
| Vol. : XVIII | Issue No : 7 | OCTOBER 2024 | Price. Rs.15/ |


## மேதகு ஆளுநர் R.N. ரவி அவர்கள் ரெட்டி சமூக ஆய்வுக்காக முனைவர் பட்டம் வழங்கினார்




## TNPSC குரூப் 2, 2A தேர்வுக்கான இலவசப் பயிற்சி தொடக்க விழா




செய்தி உள்ளே.....

உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

# HJ ஹரிணி ஜுவல்லர்ஸ்







## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
“கல்வி காவலர்” கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII அக்டோபர் 2024 இதழ் : 7



| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | V. செல்வராஜூ |
| ஆசிரியர் | : | R. இராஜசேகரன் |
| கௌரவ ஆசிரியர் | : | R. புகழேந்திரன் |
| இணை ஆசிரியர்கள் | : | R. அன்பழகன் |
| | | P. ஜனார்த்தனம் |
| துணை ஆசிரியர்கள் | : | D. மணிவாசகன் |
| | | V. ஜெயக்குமார் |
| சட்ட ஆலோசகர் | : | R. பாபு B.A.,B.L., |

**விற்பனைப் பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்

N. சுந்தரராஜூ

M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்

P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்

R. பார்த்திபன்

S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- TNPSC Group 2, 2A முதன்மைத் தேர்வுக்கான இலவச பயிற்சி தொடக்கவிழா - 6-8
- முதியோர் இல்லத்தில் தீபாவளி கொண்டாட்டம் - 9-12
- திரு.வீ.செல்வராஜூ அவர்கள் முனைவர் பட்டம் பெற்றார் - 13
- பாரதத்தின் ரத்தினம்-ரத்தன் டாடா - 13-14
- சங்கச் செய்திகள் - 16-27
- சிறப்பு கட்டுரை - 28-29
- விவசாயப் பகுதி - 30-31
- திருமணத் தகவல்கள் - 33-34


## பாராட்டுங்கள்

பிறரிடம் நல்ல விஷயங்கள் இருந்தாலும், சிறந்த திறமைகள் இருந்தாலும் அவற்றினைக் குறித்து மனத்தளவில் நீங்கள் உயர்வாக நினைத்துப் பலனில்லை. வெளிப்படையாகப் பாராட்டுங்கள். நிதானமாக அவர்களின் நல்ல விஷயங்களை, திறமைகளை விளக்கி, அதற்காகவே அவரைப் பாராட்டுவதாகக் கூறுங்கள். அதனை மேலும் வளர்த்துக் கொள்ள வாழ்த்துங்கள். இப்படி வெளிப்படையாக நீங்கள் பாராட்டுவது, உங்களைத் தலைசிறந்த மனிதராக்கும்.


## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# ரெட்டி மலர் பண்பாட்டின் பயணம்

## தலையங்கம்

நமது ரெட்டியார் சமுதாயம் குறித்த நமது வரலாறு, பண்பாட்டு அடையாளங்கள், நமது தேவைகள், சாதனையாளர்கள் பற்றிய செய்திகளோடு நமது ரெட்டி மலர் மாத இதழை 2006 செப்டம்பர் 17 அன்று வெளியிடத் துவங்கினோம். இதழ் துவக்கும் பொழுது அச்சமும், கலக்கமும் இருந்தது. ஆனால் உங்கள் ஆதரவோடு வெற்றிகரமாக 18 ஆம் ஆண்டை நிறைவு செய்து 19 ஆம் ஆண்டில் நடுநிலையோடு ரெட்டி மலர் மாத இதழ் பயணிக்கிறது.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரிலே வசித்து வந்த ஆர்வமுள்ள ரெட்டி சமூக இளைஞர்களால் தொடங்கப்பட்டது இந்த ரெட்டி சமூக மாத இதழ். ரெட்டி இளைஞர் பேரவை என்ற அமைப்பை 1995ல் எந்த சமூக எழுச்சியோடு துவங்கி செயல்படுகிறார்களோ அதே எழுச்சியோடு ரெட்டி மலர் இதழினையும் அவர்கள் நடத்தி வருகிறார்கள் என்பது பாராட்ட வேண்டிய ஒன்று.

ரெட்டி இளைஞர் பேரவையினரின் சமூக உணர்வு கருத்துகளாலும், அவர்களின் செழுமையான தமிழ்நடையாலும் சமூகப்பற்று கொண்ட கட்டுரைகளாலும் ரெட்டி மலர் இதழ் இன்று வரை ரெட்டியார் சமூக மக்களிடையே பேராதரவை பெற்று வெற்றி நடைபோட்டு வருகிறது.

இன்றைய சூழலில் ரெட்டி சமூக மக்களிடையே சுதந்திரமான கருத்தை உருவாக்க எழுத்துரிமை, பேச்சுரிமை மூலம் அரசியல் விழிப்புணர்வின் ஒளிக்கதிர்கள் நம்மவர்களிடையே மெல்ல விரிந்து பரந்து அறியாமையை அகற்றிட, தன்னம்பிக்கையை ஊட்டிட, பத்திரிகையின் மூலம் தன் பங்களிப்பை செய்திட ரெட்டி இளைஞர் பேரவையால் இந்த ரெட்டி மலர் இதழ் பீடு நடைபோடுகிறது.

நம் ரெட்டி சமூக மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வளர்க்க வேண்டும்; நம் சமூக பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உறுதியாகப் பின்பற்ற வேண்டும், மேலும் விவேகமான எல்லாக்கருத்துகளுக்கும், நியாயமான அனைத்து தரப்பு விமர்சனங்களுக்கும், பாரபட்சம் இன்றி இடம் அளித்து வருவது என்ற கொள்கையில் உறுதியா–கவே செயல்படுகிறது.

நம் சமூகத்தின் எதிர்பார்ப்புகளையும், சவால்களையும் நாங்கள் உணர்கிறோம். ரெட்டி மலர் ஏற்றுக்கொண்டுள்ள நோக்கங்கள் எதனின்றும் பின்வாங்காது. எப்பொழுதும் ரெட்டி சமூகத்திற்குரிய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் காக்கும் பணிகளில் முன்னணியில் நிற்கும். தனிமனிதரை தாக்காது, பத்திரிகை தர்மத்தின் அடிப்படையிலேயே வெளி வரும்.

இன்றைக்கும் தமிழகத்தின் எந்த மூலைக்குப் போனாலும், அங்கே ரெட்டியார்களின் கம்பீரக் குரலைக் கேட்க முடிகிறது. தம் அசாத்திய அறிவாலும், உழைப்பாலும் முன்னேறிக் கொண்டேயிருக்கும் ரெட்டியார்கள் பதிக்கும் சாதனைச் சுவடுகளை என்றென்றும் ரெட்டி மலர் எடுத்துச் சொல்லும்.

காலத்துக்கு ஏற்ப வாசிப்பாளர்களின் ரசனைகள் மாறுகின்றன. வாசிப்பின் தரம் இன்னும் மேலே செல்கிறது. ரெட்டி மலர் இதழில் அத்தனை சிறப்பியல்புகளையும் தொடர்ந்து வாசகர்கள் எதிர்பார்க்கலாம். அதே சமயம் ரெட்டி சமூகத்தின் பிற பத்திரிகைகள் செயல்படும் களத்திலிருந்து ரெட்டி மலர் முகமும் களமும் மாறுப்பட்டே இருக்கும். ரெட்டி சமூக உட்பிரிவுகளிடையே பேதமின்றி ஒற்றுமையை உருவாக்கும் அதேவேளையில் பிற சமூகத்தினரோடும் நல்லிணக்கம் பாராட்டி ஒற்றுமையை உருவாக்கும்.

உள்ளூர் செய்திகளில் எவை எல்லாம் உங்கள் குடும்பத்துக்குத் தேவை என்பதோடு, எவை எல்லாம் தவிர்க்கப்பட வேண்டியவை என்பதை கடந்த 18 ஆண்டு கால அனுபவத்தின் மூலம் உங்களுக்கு வழங்கிவருகிறோம். அநாகரிகமான அந்தரங்கச் செய்திகள் ஒருபோதும் இதில் இடம் பெற்றதில்லை. இனியும் இடம்பெறாது. சுருக்கமாக சொன்னால் ஒவ்வொரு மாத இதழும் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பும் குடும்ப இதழாக ரெட்டி மலர் திகழ்கிறது.

முக்கியமாக, வாசகர்களாகிய உங்களுடைய பங்கேற்புக்கு ஏற்ப விசாலமான களம் இங்கே காத்திருக்கிறது. வாசகர்கள் தங்கள் கருத்துகளைக் தயக்கமின்றி எழுதி அனுப்பலாம். சமுதாயப்பற்று உள்ளவர்களையும், நம் ரெட்டி சமுதாயம் மேன்மையுற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கவனத்தில் கொள்பவர்களையும் இது பெரிதும் கவரும்.

கல்வி பயிலும் நம் குழந்தைகள் தங்கள் பாடங்களைத் தவிரப் பிறத் துறை அறிவையும் பெருமளவில் பெருக்கிக்கொள்ள இந்த ரெட்டி மலர் இதழ் வழிகாட்டும். அனைவரும் படித்து பயன் பெறவேண்டும் என்பதே எங்கள் அவா. தவிர, தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காக வாசிப்பை நம்பி இருப்பவர்கள் அனைவரும் வளம்பெற ரெட்டி மலர் பேருதவியாக அமையும். இதில் வரும் செய்திகள் உங்கள் ஒருவருக்கு மட்டுமே பயன்படக் கூடியது என்பதல்ல. தலைமுறை தலை முறையாக நீங்கள் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம். உங்கள் வாரிசுகளுக்கும் இது தேவைபடுவதாகவே அமையும்.

ரெட்டி மலர் பத்திரிகையை கையில் எடுத்தால் அதைப் படித்து முடித்து விட்டுத் தான் கீழே வைக்க வேண்டும் என்கிற ஆர்வம் கொண்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் பணி–யில் உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டுகிறோம். தொடர்ந்து, தரம் விரும்பும் ரெட்டியார்களை ஒருங்கிணைக்கும் மேடையாக “ரெட்டி மலர்” இதழ் என்றென்றும் திகழும்.

உள்ளூர் இதழாக இருந்தாலும் ஏறத்தாழ 5000 வாசகர்களை சென்றடையும் சாதனையையும் நமது இதழ் நிகழ்த்தியுள்ளது. ரெட்டியார்களின் வரலாற்றையும், சாதனைகளையும் ஆவணப்படுத்தும் இந்த முயற்சியில் நீங்கள் அனைவரும் எங்களுடன் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம். இந்த சாதனைக்கு உடன் உழைத்த, ஆதரவளித்த உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

R. இராஜசேகரன் ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in




**V.செல்வராஜூ**
**நிறுவனத்தலைவர்**

## நிறுவனத்தலைவர் மடல்.....

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**ரெ**ட்டி மலர் தொடங்கி 18 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில் நல் ஆதரவு அளித்து வரும் வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் நன்றி. ஊடக வலிமையற்ற நமக்கு நம் கருத்துகளை மக்களிடையே கொண்டு சேர்க்க ஊன்றுகோலாக இருக்கும் இந்த மாத இதழின் சேவையை நம்மில் அனைவரும் உணர சமுதாய பணியாற்றுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் வீடுகள், நூலகம், சங்க அலுவலகங்களில் கொண்டு போய் சேர்த்திடல் வேண்டும் என இந்த நல்லத் தருணத்தில் வேண்டுகிறேன். மாத இதழை பெறாதவர்கள் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**ப**ல்வேறு நாடுகளில் பலவிதமான பண்டிகைகள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் முக்கியமான ஒன்று இந்த தீபாவளி பண்டிகை. பிரிந்திருக்கின்ற பல குடும்பங்கள் தீபாவளி திருநாளில் ஒன்றுசேர்வார்கள். தீபங்கள் ஜொலிக்க, பட்டாசுகள் வெடிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் இப்பண்டிகையையொட்டி 25.10.2024 அன்று ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் முடிச்சூர் கிராமத்தில் உள்ள அக்ஷயா டிரஸ்ட் நடத்தும் முதியோர் காப்பக இல்லத்தில் உள்ளவர்களுடன் தீபாவளி புத்தாடை மற்றும் இனிப்புகளுடன் கொண்டாடப்பட்டது. அவ்வண்ணமே ஒவ்வொருவரின் உள்ளமும் இல்லமும் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் நிறைந்திருக்க அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகள்.

**பி**ரபல தொழிலதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான **ரத்தன் டாடா** (வயது 86) அவர்கள் சமீபத்தில் உடல்நலக் குறைவால் அக்டோபர் 9, 2024 அன்று காலமானார். அவரது மறைவால் இந்தியா ஒரு விலைமதிப்பற்ற ரத்தினத்தை இழந்துவிட்டது எனத் தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் டாடா குழுமத்தின் அனைத்து ஹோட்டல்களையும் அவர் கொரோனா நோயாளிகளுக்கு திறந்துவிட்டார். மேலும் பாரத பிரதமர் நிவாரண நிதிக்கு 1500 கோடி நிதியை தன் பங்களிப்பாகவும் வழங்கியவர். ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான அவரது பங்களிப்பு இந்தியா மட்டுமின்றி, உலகம் முழுவதும் அழியாத முத்திரையை ஏற்படுத்தியது. அவருடைய நோக்கம் மற்றும் மனித குலத்திற்கான அவரது சேவையால் என்றென்றும் நம்மோடு அவர் வாழ்ந்துக் கொண்டிருப்பார். அவர் விட்டுச் சென்ற பாரம்பரியமும், அவர் அமைத்த முன்மாதிரியும் எதிர்வரும் தலைமுறைகளைத் தொடர்ந்து ஊக்குவிக்கும். வாழ்க அவரது புகழ்.

**ர**த்தன் டாடாவின் இழப்பு இன்னும் பல ஆண்டுகளுக்கு உலகம் முழுவதும் உள்ள மக்களால் உணரப்படும், அவர் ஒரு தொலைநோக்குத் தலைவர், வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை இந்தியாவிலும், உலகெங்கிலும் அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியவர் என பில்கேட்ஸ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**ப**ருவமழை இந்த ஆண்டு மானாவாரி விவசாயப் பகுதிகளில் இயல்பை விட அதிகமான மழைப் பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் (India Meteorological Department) தெரிவித்துள்ளது. இந்நிலையில் அண்மையில் பெய்துவரும் மழையால் சென்னையில் உள்ள சாலைகளில் நீர் தேங்க காரணம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. சென்னை உள்ளடக்கிய 6000 சதுர கி.மீ பரப்பளவில் பெய்யும் மொத்த மழையும் எண்ணூர், நேப்பியார், அடையாறு, ஒக்கியம், கோவளம் பகுதிகள் வழியாக மட்டுமே வெளியேறுகிறது. சென்னையால் 15 செ.மீ மழையை மட்டுமே தாங்க முடியும். 20 செ.மீ பெய்தால் ஒரு நாள் நீர் தேங்கும். 30 செ.மீ மழை பெய்தால் பள்ளிக்கரணை, புளியந்தோப்பு, முடிச்சூர் போன்ற நீர்நிலைகளுக்கு அருகே உள்ள பகுதிகளில் கண்டிப்பாக மழைநீர் தேங்கும். 40 செ.மீ மழை பெய்தால் 4 நாட்கள் நீர் தேங்கும் என்ற சூழலில்தான் உள்ளோம். மழைநீர் வடிகால் என்பது சாலைக்காக போடப்படுவது. 40 செ.மீ அளவுக்கு பெய்யும் மழைக்காக வடிகால் அமைக்க முடியாது. நம் பகுதியின் சூழலை புரிந்து கொண்டு முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

**த**மிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வருடாந்திர தேர்வு அட்டவணையை 10.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. இதில் குரூப் 1 தேர்வுகள் வரும் 2025 ஜீன் 15 அன்றும், குரூப் 4 தேர்வு 2025 ஜீலை 13 அன்றும், குரூப் 2, 2A தேர்வுகள் வரும் 2025 செப்டம்பர் 28 அன்றும் நடைபெற இருப்பதாக அறிவித்துள்ளது. TNPSC அறிவித்துள்ள அதிகாரமிக்க பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளில் நமது பிள்ளைகள் கலந்துக் கொண்டு போட்டித் தேர்வுகளில் வெற்றிப்பெற செய்யவேண்டும். இதற்கான இலவசப் பயிற்சியினை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் மூலம் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி, சென்னையில் வழங்கி வருகிறது. இந்த இலவசப் பயிற்சி வாய்ப்புகளில் பங்கு பெற்று பயனடைய வேண்டுகிறோம்.

**தி**ண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திற்கு சுதந்திர இந்தியாவின் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் உத்தமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஐயா அவர்களுடைய பெயரை வைப்பதற்கு பரிந்துரை செய்த மருத்துவர் ஐயா ராமதாஸ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**Dr.V. செல்வராஜ்**

# கே.ஆர்.டி கேரியர் அகாடமி மூலம் TNPSC Group 2, 2A முதன்மை தேர்விற்க்கான இலவச பயிற்சி வகுப்பு தொடக்கவிழா




TNPSC குரூப் 2, 2A முதன்மை தேர்வு எழுத இருக்கும் மாணவ, மாணவிகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் 12-10-2024 விஜயதசமி அன்று ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்டு வரும் கே.ஆர்.டி கேரியர் வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக பிரபல கல்வியாளர் Dr.திரு.M.ரமேஷ்பிரபா அவர்கள் கலந்துக் கொண்டு மாணவ, மாணவிகளுக்கு ஊக்க உரை நிகழ்த்தி, தொடர்ந்து கலந்துரையாடல் நடத்தி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினார். அறக்கட்டளை அலுவலக அரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் நிறுவனரும், இயக்குனருமான முனைவர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர்கள் பலரும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். அதுசமயம் TNPSC குரூப் 2, 2A மாணவ, மாணவிகளுக்கு புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாட குறிப்பேடு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் நிறுவனரும், இயக்குனருமான முனைவர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் தலைமை தாங்கி பேசும் போது, "இன்றைய சிறப்பு விருந்தினர் கல்வியாளர் Dr.திரு.M.ரமேஷ்பிரபா அவர்கள் தொலைகாட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராக, இயக்குனராக, தயாரிப்பாளராக சன் டிவி மூலமாக கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அறிமுகமானவர். இவர் கல்வி ஆலோசனை சொல்ல மிகுதியான அறிவு, அனுபவம் இரண்டுமே கிடைக்கப் பெற்றவர். இவர் நமது மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏபிஜே.அப்துல்கலாம் அவர்கள் படித்த சென்னை எம்ஐடி பொறியியல் கல்லூரியில் பி.டெக் படித்தவர். தொடர்ந்து இந்தியாவிலேயே புகழ்பெற்ற ஐஐஎம் கல்கத்தாவில் எம்பிஏ பயின்றவர். குமுதம், ஆனந்தவிகடன், ஜூனியர்




விகடன், குங்குமம், நக்கீரன், புதிய தலை முறை, தினகரன், தினமலர் போன்ற புகழ் பெற்ற இதழ்களில் இவர் எழுதிய கல்வி வழிக்காட்டுதல் கட்டுரைகள் மாணவர்களின் மத்தியிலும், பெற்றோர்களின் மத்தியிலும் மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறது. தனக்கே உரிய பாணியில் சிந்தனையைத் தூண்டும் இவரது பேச்சுகளால் தினமலர் நிறுவனத்துடன் இணைந்து 'ஜெயித்து காட்டுவோம்' என்ற நிகழ்ச்சி மூலமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பிரபலமடைந்தார். மக்கள் மத்தியில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் சேவையை தொடர்ந்து செய்து வரும் இவர் இன்று நமது நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொள்ள வந்திருப்பது ஒரு வரப்பிரசாதம். அவரை



நமது ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் கே.ஆர்.டி கேரியர் அகாடமி மாணவர்கள் சார்பிலும், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பிலும் வருக, வருக என வரவேற்கிறேன்” என்றார்.

சிறப்பு விருந்தினர் கல்வியாளர் Dr.திரு.M.ரமேஷ்பிரபா அவர்கள் TNPSC குரூப் 2, 2A எழுத இருக்கும் மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

முன்னதாக அவர் பேசும் போது, “கல்வித் துறை பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. வேலைவாய்ப்பை உறுதிப் படுத்தும் கல்விக்குப் பெரிதும் முக்கியத்துவம் தரப்படுகிறது. இந்த சூழலில் கல்லூரி படிப்பை முடித்து இங்கு




வருகைத் தந்திருக்கின்ற உங்கள் அனைவரது அறிமுகமும் எனக்குத் தேவை. மேலும் அறிமுகத்தைத் தொடர்ந்து மாணவர் களிடையே போட்டித் தேர்வுக்கான தேடல் நிகழ்ந்து வரும் இந்த சூழலில் குடிமைப்பணி, தமிழ்நாடு பணி–யாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடை பணி–யாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய அரசு பணி–யாளர் தேர்வாணையம் உள்ளிட்டவைகள் நடத்தும் பல போட்டித்தேர்வுகளில் கலந்துக் கொள்ளக் கூடியவர்கள் இங்கு வருகைத் தந்திருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்த நிகழ்ச்சி சிறந்த வழிக்காட்டியாக அமையவேண்டும் என்பதே எனது இலக்கு. இந்த நிகழ்ச்சியை கேள்வி–பதிலாக கலந்துரையாடலாம் என்பதையே நான் விரும்புகிறேன். கூச்ச மில்லாமல் கேள்விகளைத் தொடங்கலாம்” என்றார்.

**மாணவியின் கேள்வி :** சார் தேர்வில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

**பதில் :** அவர் தனக்கே உரிய பாணியில் பதி–லளிக்கும் போது, உங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி நேர்மறையான நட–வடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு விருப்பமான விஷயங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்துங்கள். குறைகூறுவதை இப்போதே விட்டுவிடுங்கள். எதைப்பற்றியேனும் குறை கூறுவதற்கு ஒரு நியாயமான காரணம் உங்களிடம் இருந்தால், அது குறித்து நிவர்த்தி செய்யக்கூடிய நிலையில் உள்ள சரியான நபரை அறிந்து அவரிடம் அதைக் கூறுங்கள்.

**கேள்வி :** சார் நான் இரண்டு முறை போட்டித் தேர்வுகளில் கலந்துக்கொண்ட போதிலும் வெற்றிப் பெற முடியவில்லையே, என்ன செய்வது?

**பதில் :** உங்களுடைய கடந்த கால எண்ணங்களும், செயல்களும் தான் இன்று உங்களை இங்கு அழைத்து வந்திருக்கின்றன. உங்களுக்கு ஒன்று பிடிக்கவில்லையென்றால், அதை மாற்றுங்கள். அதை உங்களால் மாற்ற முடியவில்லையென்றால் அதைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றிக் கொள்ளுங்கள். கடந்த காலத்தில் வாழ்வதை நிறுத்துங்கள். வெற்றி பெறலாம்.

**கேள்வி :** எந்த வகையில் நான் முயற்சி செய்ய வேண்டும்?

**பதில் :** தற்போதைய உலக நடப்புகளை அறிந்துக் கொள்ளுங்கள். சுற்றி உள்ளவர்கள் உங்களை எப்படி நடத்துகின்றனர் என்பதையும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். மற்றவர்கள் சொல்லுவதை பற்றி கவலைப்படக் கூடாது. அது தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும். எனவே அது அவர்களைப் பற்றி எடுத்துரைக்கிறதேயன்றி அது உங்களைப்பற்றியது அல்ல. அடுத்தவர்களை குறை கூறாதீர்கள். உங்களுக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது என்றால், 80 சதவீத மக்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை; மீதி பேர் அது குறித்து மகிழ்ச்சியடைகின்றனர். எனவே விடாமுயற்சியுடன் இலக்கை நோக்கி முயற்சிப்பது அவசியம். அதுவே வெற்றியை தேடித் தரும். யதார்த்தத்திற்கும், கற்பனைக்கும் இடையேயான வேறுபாட்டை உங்கள் மூளையால் கூறமுடியாது. எனவே, நீங்கள் கற்பனை செய்துள்ள விசயங்களை நிறைவேற்றுவதற்காக அது உங்களை முடுக்கிவிடுகிறது. அதனை பயன்படுத்தி நீங்கள் வெற்றிப் பெற வேண்டும்.

மேலும் எனது சிறந்த ஆலோசனையாக நான் சொல்ல விரும்புவது ஒன்று மட்டும் தான். இங்கு உள்ள பெரும்பாலானவர்கள் கிராம சூழ்நிலையில் இருந்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஏழையாக பிறந்திருந்தால் அது உங்கள் தவறு அல்ல. ஆனால் நீங்கள் ஏழை யாக இறந்தால் அது நிச்சயமாக உங்களுடைய தவறுதான். எனவே நீங்கள் அடைய விரும்புகின்றவற்றை நோக்கி தொடர்ந்து



விடாமுயற்சியுடனும், நம்பிக்கையுடனும், கடின உழைப்போடும் செயல்பட்டால் வெற்றி உறுதியாகும்.

**கேள்வி :** நான் இலக்கை அடைய தற்போது எத்தகைய முடிவை எடுக்கவேண்டும்?

**பதில் :** உலகில் உள்ள தலைசிறந்த சாதனையாளர்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்கு பயன்படுத்துகின்ற ஒரு செயல்முறை **சுயபிரகடன உறுதிமொழியாகும்.** அதனை இன்று நீங்கள் எடுத்துக்கொண்டு



வாழ்வில் வெற்றிப்பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு தனக்குரிய பாணியில் எளிதாக புரியும் வகையில் பதிலளித்து உற்சாகப் படுத்தினார்.

நிகழ்ச்சியின் போது ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் இலவசப் பயிற்சியினை மேற்கொண்டு வரும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மாணவ, மாணவிகளுக்கு TNPSC குரூப் 2, 2A போட்டித் தேர்வு எழுத இருப்பவர்களுக்கு புதிய பாடத் திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட பாடக் குறிப்பேடு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டது.



நிறைவாக, ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.J.அருண்குமார் அவர்கள் நன்றி தெரிவித்து பேசும் போது, "இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வருகைத் தந்த சிறப்பு விருந்தினர் கல்வியாளர் Dr.திரு.M.ரமேஷ்பிரபா அவர்களுக்கும், நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனரும், கே.ஆர்.டி.கேரியர் அகாடமி இயக்குனருமான




முனைவர் திரு.வீ.செல்வராஜு அவர்களுக்கும் மற்றும் ரெட்டி இளைஞர் பேரவையின் உறுப்பினர் திரு.K.கருணாகரன் அவர்களுக்கும், இங்கு பயின்று சாதனைப் படைத்து அரசுப் பணியில் அமர்ந்துள்ள திரு.R.புவியரசு அவர்களுக்கும், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய மாணவி செல்வி.கவிதா அவர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும், ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய அறக்கட்டளை அறங்காவலர்களுக்கும், ஆசிரியர்கள், அலுவலக உதவியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.



## புத்தக நண்பன்

உங்களுக்கு ஆறுதல் தரக்கூடிய, தூண்டுதலாய், வழிகாட்டியாய் விளங்கக் கூடிய ஒரு புத்தகத்தை எப்போதும் உங்களுடன் வைத்திருங்கள். எந்த மாதிரி கடினமான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும், அந்தப்புத்தகத்தின் ஏதாவது ஒரு பக்கத்தை ஒருமுறை புரட்டிப்பார்த்தாலே போதும் நீங்கள் இயல்பு நிலைக்கு வந்துவிடுவீர்கள். மனத்தளவில் சோர்வடைந்திருந்தால், நிச்சயமாக புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

# முதியோர் இல்லத்தில் தீபாவளி கொண்டாட்டம்



ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் தீபாவளியை முன்னிட்டு அதன் நிறுவனர் திரு.வீ.செல்வராஜூ அவர்கள் தலைமையில், அறங்காவலர்கள் திரு.P.தாமோதரன், திருமதி.தேவிமோகன், திரு.K.ரெங்கராஜன், திரு.V.ஜெயக்குமார், சமூக ஆர்வலர்கள் திருமதி.ரமாபிரபா, திருமதி.அமிர்தா ராஜகோபால், அறக்கட்டளை அலுவலக மேலாளர் திரு.P.சுந்தர்ராஜ் ஆகியோர் 25.10.2024 அன்று தாம்பரத்தை அடுத்த முடிச்சூர் கிராமத்தில் உள்ள அக்ஷயா டிரஸ்ட் நடத்தி வரும் முதியோர் காப்பகத்திற்கு நேரில் சென்று ஆதரவற்ற மூத்த குடிமக்களின் குடியிருப்பை பார்வையிட்டனர். தொடர்ந்து, காப்பகத்தில் தங்கியிருக்கும் 66 ஆதரவற்ற மற்றும் ஆதரவு மறுக்கப்பட்ட முதியவர்களுக்கு தீபாவளியை முன்னிட்டு புத்தாடைகளாக பெண்களுக்கு சேலை, ஆண்களுக்கு வேஷ்டி, சட்டை, பேண்ட் மற்றும் பெட்ஷீட், இனிப்பு, கார வகைகள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.P.தாமோதரன் அவர்கள் தலைமைத் தாங்கி பேசும் போது, “இந்த இல்லம் என்பது குடும்பம் இல்லாத அல்லது குடும்பத்தாரால் கைவிடப்பட்ட முதியோர்கள் வாழும் இடம். கவனிக்க ஆள் இல்லாத இந்த முதியோர்களுக்கான இடத்தில் நடைபெறும் இந்த நல்ல நிகழ்ச்சியின் மூலம் உங்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது எங்களுக்கு



மகிழ்ச்சியைத் தருகிறது. இது உண்மையில் ஒரு உணர்ச்சிகரமான நிகழ்ச்சி தான். இதற்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை இந்தப் பகுதியை தேர்வு செய்தமைக்கு முதலில் நான் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அனைத்து உதவிகளையும் செய்து வரும் ஓ.பி.ஆர் அறக்கட்டளையின் நல்ல உள்ளம் படைத்த அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்” என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனர் முனைவர் திரு.வீ.செல்வராஜூ அவர்கள் கலந்துக்கொண்டு பேசும் போது, “எங்களது வருகையின் மூலம் உங்களின் முகத்தில் மகிழ்ச்சியைக்கொண்டு வருவதே ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் நோக்கமாகும். உங்களுக்கு விநியோகிக்க



எங்களால் முடிந்த சில தீபாவளிப் பரிசுப் பொருட்களை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். அக்ஷயா அறக்கட்டளையை நிர்வகித்து வரும் திரு.இராஜகோபாலன் அவர்கள் இந்த வாய்ப்பினை எங்களுக்கு வழங்கியிருப்பதற்கு நன்றித்தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு உறுதுணையாக இருந்த திருமதி.அமிர்தா ராஜகோபால் அவர்களுக்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி யடைகிறோம். திருமதி.அமிர்தா அவர்கள் உங்களின் வழக்கமான தேவையை எங்களுக்கு விளக்கி கூறினார். எல்லாருடைய வாழ்க்கை யிலும் இன்ப–துன்பங்களும், கஷ்டங்களும் இருக்கவே செய்கிறது. மேலும் நான் சில அற்புதமான, ஆனால் உணர்ச்சிகரமான அனுபவத்தையும் இதன் மூலம் அறிந்து கொண்டேன். இருப்பதை கொண்டு சிறப்புடன்



வாழ ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் நிறைந்ததே வாழ்க்கை என்பதை மூத்த குடிகளான உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. இங்கு உள்ள ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் நடந்த நல்ல விஷயங்களை எண்ணிப் பார்த்து எஞ்சிய நாட்களையும் மகிழ்ச்சியோடு வாழ இந்தத் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற இதற்கு பொருள் உதவி செய்த திருமதி.கலைச்செல்வி ஜெயக்குமார், திருமதி.ரமாபிரபா, திருமதி.தேவிமோகன், திருமதி.லலிதா, திருமதி.விஜயகுமாரி நடராஜன், திருமதி.அனிதா வெங்கடபெருமாள் மற்றும் இனிப்பு காரங்கள் வழங்கிய திருமதி.சசிகலா செல்வராஜு, நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்து தந்த அறங்காவலர் திரு.P.தாமோதரன் மற்றும் சமூக சேவகி திருமதி.அமிர்தா ராஜகோபால் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி. சிறந்த பணியாளர்கள், எந்நேரமும் காவலாளி சேவை, சிறந்த அடிப்படை வசதி, மருத்துவ செவிலியர் உதவி, தரமான உணவு என அனைத்தையும் பெற்றுள்ள இந்த காப்பகம் சிறப்பான பேருடன் காலச்சூழ்நிலைக்கு ஏற்ப மேலும் விரிவடைந்து வருவதற்கு அக்ஷயா தொண்டு நிறுவனத்திற்கும் நன்றி தெரிவித்துக்



கொள்கிறேன்” என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் பேசும் போது, “அக்ஷயா தொண்டு நிறுவனம் இந்த இல்லத்தை சிறப்பாக பராமரித்து வருகிறது. இந்த முதியோர் காப்பகத்தில் தங்கியுள்ள ஆதரவற்ற மூத்த குடிமக்களை மகிழ்விக்க நாங்கள் முடிவெடுத்தோம். அதன்படி எங்களால் முடிந்த சிறு உதவியாக எங்கள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த சில ஆர்வலர்கள் உதவி செய்ய முடிவெடுத்தனர். அந்த நொடியிலிருந்து இந்த நிமிடம் வரை திருமதி.கலைச்செல்வி ஜெயக்குமார், திருமதி.ரமாபிரபா, திருமதி.லலிதா, திருமதி.விஜயகுமாரி நடராஜன், திருமதி.அனிதா வெங்கடபெருமாள், திருமதி.சசிகலா செல்வராஜு, சமூக சேவகி திருமதி.அமிர்தா ராஜகோபால் உள்ளிட்ட பலரும் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்பட்டு இந்த தீபாவளி பரிசுப் பொருட்களை வழங்குவது மிகுந்த மகிழ்ச்சியையும், மனநிறைவையும் எங்களுக்கு தருகிறது. நீங்கள் எல்லா நாட்களிலும் இன்று போல் என்றும் மகிழ்ச்சியோடும், சந்தோஷமாகவும், உடல் ஆரோக்கியத்தோடும் வாழவேண்டும் என இந்த நேரத்தில் இறைவனை வேண்டுகிறேன். இது ஒரு அன்பான உறவு, அழகான குடும்பம், என்றும் நீங்கள் ஆனந்தத்தோடு இருக்க வேண்டும் என இந்த



தீபாவளி பண்டிகை முன்னிட்டு ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் வாழ்த்துகிறேன். நீங்கள் அனைவரும் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டும். அவரது தியாகம், தேசப்பற்று, சமூகத் தொண்டு, உண்மையான ஆன்மீகம் மற்றும் மனிதநேயப்பண்புகளை அறிந்துக் கொள்வதற்காகவும் ஓ.பி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை இந்த நூலகத்திற்கு வழங்குகிறேன்" என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.V.ஜெயக்குமார் அவர்கள் பேசும் போது, "எங்கள் அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர் திரு.வீ.செல்வராஜ் அவர்கள் எடுக்கும் எல்லா முடிவுகளும் நல்லவண்ணம் முடியும். காரணம் அவர் சொல்வதோடு நிறுத்தி கொள்பவர் அல்ல. செயலில் இறங்கி களத்தில் வெற்றி பெற கடுமையாக உழைப்பவர். மேலும் அவருக்கு உறுதுணையாக நாங்கள் முழுமையாக உடனிருந்து ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். இன்றைய தினம் கூட தீபாவளி பரிசுப் பொருட்களை இந்த முதியோர் இல்லத்திற்கு வழங்க வேண்டும் என்று சொன்னார். மூத்தக் குடிமக்களான நீங்களும் எங்களது பெற்றோர்களைப் போன்றவர்கள். எனவே தீபாவளி அன்று புத்தாடை உடுத்திடவும், இனிப்பு மற்றும் கார வகைகளுடன் கொண்டாட வேண்டும் என்பதை இன்று உறுதி செய்திருக்கிறார். அது மட்டுமல்லாமல் ஏழை கிராமப்புற மாணவர்கள் கல்விப் பயிலவும், TNPSC போன்ற போட்டித் தேர்வுகளை எதிர் கொள்ளவும் எங்களது ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதில் உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளையும் சேர்த்து விடலாம். அல்லது இந்த செய்தியை தேவைப் பட்டவர்களுக்கு இதனை எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்" என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.K.ரெங்கராஜன் அவர்கள் பேசும் போது, "நீங்கள் அனைவரும் நீண்ட ஆயுள், நிறைவான செல்வம், நோயற்ற வாழ்வு, உடல் ஆரோக்கியம் பெற்று சிறப்போடு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் மாதந்தோறும் உடலைப் பரிசோதனை செய்து கொள்வதோடு



ஒவ்வொருவரும் உங்களால் முடிந்த உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். முற்றிலும் இயற்கையான சூழலில் இந்த காப்பகம் அமைந்துள்ளதால் இங்கு தங்கியுள்ள உங்கள் அனைவருக்கும் ஒரு வித அமைதிக் கிடைக்கிறது. சேவை மனப்பான்மையுடன் இந்தத் தொண்டு நிறுவனம் உங்கள் எஞ்சிய காலம் முழுமைக்கும் இலவசமாக இந்த வசதியை செய்து தந்திருக்கிறார்கள் என்பதை கேள்விப்படும் போது உண்மையில் பெரும் மகிழ்ச்சிக் கொள்கின்றேன். நீங்கள் அனைவரும் தீபாவளி மட்டுமல்லாமல் எல்லா நாட்களிலும் மகிழ்ச்சியோடும்,







ஆரோக்கியத்தோடும் வாழ வேண்டும் என இறை–வனைப் பிரார்த்திக்கிறேன்” என்றார்.

சமூக ஆர்வலரும், மகளிர் அமைப்புக்கு பேருதவி செய்து வருபவருமான திருமதி.C.ரமாபிரபா அவர்கள் அக்ஷயா முதியோர் காப்பகத்தில் தங்கியுள்ள அனைவருக்கும் அவரது திருக்கரங்களால் புடவை, பேன்ட், சர்ட், வேஷ்டி, குளிர்கால பெட்ஷீட், இனிப்பு மற்றும் கார வகைகள் உள்ளிட்ட அனைத்தையும் வழங்கி




நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தார்கள். அதுசமயம் நிகழ்ச்சியில் மூத்த குடிமக்கள் பாட்டு பாடி உற்சாகப்படுத்தியதோடு ஒருவருக்கொருவர் தீபாவளி வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

நிறைவாக அக்ஷயா முதியோர் காப்பகத்தை பராமரித்து வரும் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் நன்றி தெரிவித்து பேசும் போது, “தீபாவளியை முன்னிட்டு அக்ஷயா இல்லத்துக்கு வருகை தந்து முதியோர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள்



வழங்கிய ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளைக்கு நன்றியுடன் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அறக்கட்டளையில் உள்ள அனைவரின் வாழ்விலும், அவர்களுடைய குடும்பத்தினர்கள் வாழ்விலும் பொங்கும் வளமும் நலமும் இன்பமும் பெற்று வாழ கடவுளை மனதார வேண்டிக் கொள்கிறோம்.

எங்களை நேரில் சந்தித்து இந்த காப்பகம் தேடிவந்து தீபாவளிப்பொருட்களையும், இனிப்பு



வகைகளையும் வழங்கியது எங்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை தருகிறது. ஆதரவின்றி பல ஆண்டுகளாக காப்பகத்தில் வந்து சேர்ந்த பலர் இங்கு உள்ளனர். எங்களைப் பொறுத்த வரை இந்த தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடுவோம் என்கிற நம்பிக்கையை உருவாக்கி தந்தமைக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளைக்கு கோடி நன்றிகள். நல்ல உடை வழங்கியதோடு இனிப்பு வழங்கியது பெரும் மகிழ்ச்சியை தருகிறது. இன்று காப்பகத்தில் உள்ள நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருக்கிறோம். இந்தப் பெரியவர் களுடைய வாழ்த்துகளும், ஆசீர்வாதமும் உங்களின் பல தலைமுறைகளையும் வாழ்த்தும். இரக்க உள்ளம் கொண்ட ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்களுக்கும், மகளிர் அமைப்பில் உள்ள அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.



# மேதகு ஆளுநர் R.N. ரவி அவர்கள் ரெட்டி சமூக ஆய்வுக்காக முனைவர் பட்டம் வழங்கினார்




ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலரும், ரெட்டி இளைஞர் பேரவை நிறுவனத்தலைவரும், கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் இயக்குநருமான திரு.வீ.செல்வராஜு அவர்கள் 2012 முதல் 2024 வரை 12 ஆண்டுகள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் **தமிழக ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு –ஓர் ஆய்வு, SOCIO - CULTURAL AND POLITICAL HISTORY OF REDDIARS IN TAMIL NADU – A Study** எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டார். அரசுத் துறையில் பணியாற்றியபோதே இவர் தன் ஓய்வு நேரத்தில் பகுதி நேர பணியாக நிர்வாகப் பணிகளுக்கிடையே ஆய்வு செய்து வந்தார். ஆய்வறிக்கையை ஓய்வுபெற்றப்பின் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தார்.


இவரின் ஆய்வு முடிவுகள் பன்னாட்டு–உள்நாட்டுப்புறத்தேர்வாளர்களாலும், பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினராலும் 2024 ஜூன் 3 அன்று புறத்தேர்வாளர் மற்றும் ஆய்வாளர்கள் முன்னிலையில் வாய்மொழித் தேர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து திரு.வீ.செல்வராஜு அவர்களுக்கு புறத்தேர்வர்களும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினரும் **வரலாற்றுத்துறையில் முனைவர் பட்டம்** வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அக்டோபர் 29, 2024 அன்று நடைபெற்ற 39வது பட்டமளிப்பு விழாவில் தமிழக மேதகு ஆளுநர் திரு.R.N.ரவி அவர்கள் முறையாக திரு.வீ.செல்வராஜு அவர்களுக்கு **தமிழக ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு, (SOCIO - CULTURAL AND POLITICAL HISTORY OF REDDIARS IN TAMILNADU)** எனும் ஆய்வுக்காக முனைவர் பட்டம் வழங்கினார்.

தமிழகத்தில் ரெட்டியார்கள் குறித்த வரலாற்று ஆய்வினை இதுவரை எவரும் செய்திடாத நிலையில் இந்த ஆய்வின் மூலம் சாதனை படைத்த திரு.வீ.செல்வராஜு அவர்களை ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள், ரெட்டி இளைஞர் பேரவை நிர்வாகிகள், கே.ஆர்.டி. கேரியர் அகாடமி, சமூக ஆர்வலர்கள், ரெட்டி மலர் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் சார்பாக பாராட்டி மகிழ்கிறோம்.

தகவல் : ஆசிரியர் திரு.R.இராஜசேகரன்.

# பாரதத்தின் ரத்தினம்..! ரத்தன் டாடா



உரங்கள் முதல் விமானங்கள் வரை, ஆடைகள் முதல் அறிவியல் உலகின் செமிகண்டக்டர்கள் வரை உற்பத்தி சேவையை 'டாடா' குழுமம் நிர்வகிக்கிறது. இருபது ஆண்டுகள் 'டாடா' குழுமத் தலைவராக இருந்த ரத்தன் டாடா, குழுமத்தை விரிவாக்கம் செய்து வலுவும் சேர்த்திருக்கிறார்.

தனிமையில் வாடும் முதியோர்களைப் பாதுகாக்கும் நிலையம், புற்றுநோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க மருத்துவமனை, ஹாக்கி, வில் விளையாட்டுப்பயிற்சி நிலையங்கள், தான் படித்த அமெரிக்க கல்லூரிகள்... என ஒவ்வொன்றுக்கும் பல நூறு கோடி ரூபாய்களை அன்பளிப்பு செய்துள்ளார் ரத்தன்.

1937–இல் மும்பையில் நவல் டாடா–ஸூனி டாடாவுக்கு மகனாகப் பிறந்த ரத்தன் டாடாவின் பத்தாம் வயதில் பெற்றோர் பிரிந்தனர். அம்மா மறுமணம் செய்து கொண்டார். ரத்தனின் அப்பாவே ஜே.ஆர்.டி.டாடாவின் விருப்பத்தின் பேரில், டாடா குடும்பத்தால் தத்து எடுக்கப்பட்டவர் தான். ஸூனியோ டாடா குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோர் பிரிந்ததும் ரத்தனை கண்ணின் மணியாக வளர்த்தவர் அவரது பாட்டி.

நியூயார்க்கின் கார்னெல் பல்கலைக்கழகத்தில் படித்த ரத்தன், ஹார்வர்டிலும் தொழில் நிர்வாகம் படித்தார். படிக்கும்போது அமெரிக்கப் பெண்ணுடன் காதல் ஏற்பட்டு திருமணம் செய்துகொள்ள இரு வீட்டாரும் சம்மதித்தனர். நடுவில் பாட்டிக்கு உடல்நலம் பாதிக்கப்படவே ரத்தன் மட்டும் மும்பை வந்தார். 1962–இல் இந்தியா– சீனா யுத்தம் நடைபெற்றதால் பாதுகாப்பு கருதி ரத்தனுடன் இந்தியா வர காதலியை அவரது வீட்டில் அனுமதிக்க வில்லை.

பாட்டி இறந்து போக, அதே சமயம் காதலி வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டார். பாட்டி மறைவாலும், காதலியின் திருமணத்தாலும் தளர்ந்த ரத்தன் டாடா இந்தியாவில் தங்கி ஜே.ஆர்.டி.டாடாவின் விருப்பத்தின் பேரில் ஜாம்ஷெட்பூர் இரும்புத் தொழிற்சாலையில் சாதாரண ஊழியராகச் சேர்ந்தார். அவர் கடைநிலை தொழிலாளர்களுடன் சேர்ந்து தொழில் நுணுக்கங்களைக்கற்றார். அந்த அனுபவமே பின்னாளில் அவரது தலைமை இருக்கையில் அமரச்செய்தது.

சரக்கு வாகனங்களைத் தயாரித்த டாடா நிறுவனமானது கார்கள் தயாரிப்பிலும் ஈடுபடத் தொடங்கியது. ஆனால், கார்கள் விற்பனை ஆகாமல் நஷ்டம் பெரும் அளவில் ஏற்பட, கார் தயாரிப்பை அமெரிக்க தயாரிப்பு நிறுவனமான 'ஃபோர்ட்'டிடம் விற்கப் பேசினர்.

டாடா குழுமம் இரும்பை மட்டும் தயாரிப்பதுடன் நின்றிருக்கலாம். அனுபவம் இல்லாத கார் தயாரிப்புக்கு ஏன் வரவேண்டும்' என்று அந்த நிறுவனத்தினர் கேலியாகப்பேச, ரத்தன் இந்தியா திரும்பினார். தனது திறமை–களைப் புகுத்தி, பல வகை கார்களை தயாரித்து சாதித்தும் காட்டினார்.

'ஃபோர்ட்' நிறுவனத்துக்குச் சோதனைக் காலம். ஜாகுவார், லேண்ட்ரோவர் போன்ற சொகுசு கார் தயாரிப்புத் தொழில்நுட்பத்தை 2008ல் வாங்கி, அந்தத் தொழில்நுட்பத்தை இதர கார்களிலும் அறிமுகம் செய்து டாடா கார் தயாரிப்பு நிறுவனத்தை ரத்தன் முன்னணி நிறுவனமாக மாற்றினார்.

தனி சொகுசு விமானத்தில் ரத்தன் பயணிக்கும் நிலை இருக்கும்போதும், சாதாரண விமானத்தில் எக்கனாமி வகுப்பில்தான் பயணம் செய்தார். நிறுவனச் செலவில் ரத்தன் ஆடம்பர வாழ்க்கை வாழாதவர். இரண்டு படுக்கைகள் கொண்ட சாதாரண பிளாட்டில்தான் குடியிருந்தார்.

தெரு நாய்களிடத்தில் கனிவு காட்டிய ரத்தன் கோவா சென்றிருந்த போது தெரு நாய் ஒன்றை வீட்டுக்குக் கொண்டு வந்து வளர்த்து வந்தார். 'கோவா' என்று பெயரிடப்பட்ட அந்த நாய் அக்டோபர் 10ல் ரத்தனை காணாமல் ஒன்றுமே சாப்பிடவில்லையாம். இறுதியாக ரத்தனைக் காண கோவாவை இறுதி சடங்குக்கு அழைத்து வந்துள்ளனர்.

மும்பையில் தெரு நாய்கள், சிறு விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்க ஒரு மருத்துவமனை ஒன்றையும் துவங்கியுள்ளார் ரத்தன். டாடா தலைமை அலுவலகத் தரைத் தளத்தில் தெரு நாய்களுக்கு என்று ஒரு அறை ஏற்படுத்தி அதில் உணவு, விளையாட்டுப் பொருள்களை வைத்திருந்தார்.

டாடா குழுமத்தை புது பலத்துடன் எழுந்து நிற்க செய்ய டெட்லி டீ, தென் கொரியாவின் 'தாவூ' மோட்டார்ஸ், கோரஸ் இரும்பு ஆலை, அமெரிக்காவின் ஜெனரல் கெமிக்கல்ஸ் நிறுவனங்களை வாங்கினார். உள்ளூர் வர்த்தக நிறுவனங்களையும் டாடா குழுமத்துடன் இணைத்தார். அதில் கோரஸ் டாடா குழுமத்துக்கு ஒரு சுமையாக மாறியது. 'எனது முடிவு சரியில்லாமல் இருக்கலாம். தவறானதை சரி செய்வதில் தான் வெற்றி இருக்கிறது' என்றார் ரத்தன். ஆனால், பெட்ரோலிய வணிகத் துறையில் ரத்தன் நுழையவில்லை.

ரத்தன் டாடாவின் சிந்தனை வணிக ரீதியில் அமைந்தாலும், நடுத்தர மக்களும் கார் வாங்க வேண்டும் என்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள 'நானோ' கார் தயாரிப்பை அறிவித்தார். முடியாது என்று விமர்சனம் எழுந்தாலும், ஒரு லட்சத்துக்கு கார் என்று அறிவித்து விட்டதால்,





அதனைத் தயாரித்து விற்போம் என்று உறுதியாக நின்றார் ரத்தன்.

கணினி மென்பொருள் உலகில் ரத்தன் டாடா தொடங்கிய 'டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்' அதிக லாபத்தை வழங்கி, பிற டாடா நிறுவனங்களில் உயர்வுக்கு உரமாக அமைந்தது.

இங்கிலாந்து அரச குடும்பம் 2018 பிப்ரவரி 6—ல் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது ரத்தன் டாடாவுக்கு வழங்குவதற்கான விழாவை பக்கிங்ஹாம் அரண்மனையில் ஏற்பாடு செய்திருந்தது. லண்டன் புறப்பட சில நாட்கள் இருக்கும் போது ரத்தனின் வளர்ப்பு நாய் உடல் நிலை திடீரென்று மோசமாக, விழாவுக்குச் செல் வதை ரத்து செய்தார்.

மன்னர் சார்லஸோ, சாதாரண மிருகத்துக்கு இந்த அளவுக்கு முக்கியத்துவம் தருவார்களா? ரத்தன் மாமனிதர் என்று வியந்து பாராட்டினார்.

பிரபல பாப் பாடகி நஸியா ஹஸன் ஜொஹபை சந்திக்க ரத்தன் லண்டன் சென்றார். ஒப்பந்தம் போட இன்று வரலாமா? என்று ரத்தன் கேட்க, இப்போது முடியாது. இரண்டு நாள் கழித்து வாருங்கள்' என்று நஸியா சொன்னார். ரத்தன் காத்திருந்து அவர்களைச் சந்தித்து இசை ஆல்பம் தயாரிக்க ஒப்பந்தம் செய்தார். ஆல்பம் வெற்றி விழா மும்பையில் நடைபெற்றபோது, நஸியா ஹஸன்—ஜொஹப் பங்கேற்றபோதுதான் ரத்தன் யார் என்பதை தெரிந்து வியர்த்துப்போயினர். ஆனாலும், அவர்களை ரத்தன் டாடா வயதோ, அந்தஸ்தோ, வித்தியாசமோ பார்க்காமல் தனது இல்லத்துக்கு அழைத்து விருந்து கொடுத்து கௌரவப்படுத்தினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, ஏடிஎம் கார்டுக்கான 'பாஸ்வேர்ட்' மாற்றிக்கொள்ள சில மாதம் காத்திருக்கவேண்டும். ஆன்லைன் வசதி வராததால் வங்கிக்கு சென்றோ அல்லது ஏடிஎம் இருக்கும் இடத்திற்குச் சென்றோ மாற்றிக் கொள்ள வேண்டும். முக்கிய வாடிக்கையாளருக்கு நேரடியாக ஆள் மூலம் ஸ்வைப்பிங் கருவியை அனுப்பி பாஸ்வேர்டை மாற்றிக்கொடுப்பார்கள் வங்கி அலுவலர்கள். வங்கி மேலாளர் ரத்தனின் பாஸ்வேர்டை மாற்றித்தர ஆளை அனுப்ப வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, ரத்தன் ஏடிஎம் இருக்கும் அறைமுன் வரிசையில் நின்று தனது பாஸ்வேர்டை மாற்றிக்கொண்டு காரில் புறப்பட்டு விட்டார். அத்துணை எளிய மனிதர் அவர்.

இதயம் துடிப்பதைப் பதிவு செய்யும் இசிஜி வரைபடத்தில் கோடுகள் ஏறி இறங்கி பதிவாகும். வரைபடத்தில் இதயத்துடிப்பு நேர்கோடாக அமைந்தால் அந்த நபர் இறந்துவிட்டார் என்று அர்த்தம். அதுபோல் ஏற்ற இறக்கங்கள் வாழ்க்கையின் ஒரு அம்சம். அவைதான் ஒரு வரை முன்னோக்கி நகர்த்தும். வாழ்கிறார் என்று உறுதி செய்யும் என்று ரத்தன் டாடா பலமுறை சொல்லியிருக்கிறார்.

பெற்றோர் விவாகரத்து செய்து பிரிந்த பின் நானும், என் தம்பியும் பெரிய அளவில் மன உளைச்சலுக்கு ஆளானோம். நாங்கள் பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தோம். அம்மா இரண்டாவது திருமணம் செய்து கொண்ட செய்தி பரவியதும், பள்ளியில் என்னையும் தம்பியையும் மாணவர்கள் கேலி செய்வார்கள். ஒரு பக்கம் அழுகையாக வரும். இன்னொரு பக்கம் கோபமாகவும் இருக்கும். கிண்டல் செய்பவர்களிடம் சண்டை போடக்கூடாது, கண்டுகொள்ளாமல் கட்டுப்பாட்டுடன் இருங்கள் என்று பாட்டி சமாதானம் செய்வார்.

இன்னொரு பக்கம் அப்பாவோ, அவர் நினைப்பதை நான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். வயலின் வாசிக்கக் கற்றுக் கொள்ளணும் என்று நான் நினைத்தேன். பியானோ கற்றுகொள் என்றார். மேல்படிப்புக்கு அமெரிக்கா போகணும் என்றபோது, இங்கிலாந்துக்குப் போ என்றார். கட்டடக் கலை படிப்பில் சேர வேண்டும் என்ற போது, பொறியியல் படி என்றார். பாட்டியின் தலை யீட்டால் நான் அமெரிக்கா சென்று எனது விருப்பப்படி கட்டடக் கலை படித்தேன். இவ்வாறு வாழ்க்கையில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்துள்ளேன். எனக்கு ஒரு குடும்பம் இல்லை. குடும்பம் என்று வந்து விட்டால் பொறுப்பு கூடும். எனது சுதந்திரம் குறையும். டாடா குழுமப் பணிகளில் கவனம் செலுத்த முடியாது என்பதற்காகவே திருமணம் செய்து கொள்ளவில்லை. பலரது வற்புறுத்தல்களால் திருமணம் செய்து கொள்ளத் தயாரான போதும், நான் கடைசி நிமிடத்தில் வேண்டாம் என்று விலகிவிட்டேன். இப்படி நான்கு முறை நடந்துள்ளது' என்று பலமுறை ரத்தன் கூறியுள்ளார்.

இந்தியாவின் ரத்தினமான ரத்தன் டாட்டாவுக்கு 'பாரத் ரத்னா' பட்டம் வழங்கப்படாமல் இருக்குமா என்ன?

— நன்றி தினமணி கதிர்

## ரத்தன் டாடாவின் சிறந்த மேற்கோள்கள்

சரியான முடிவுகளை எடுப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் முடிவுகளை எடுத்து பின்னர் அவற்றை சரி செய்கிறேன்.

கீழே விழுவதும் பின்பு மேலே எழுவதும் வாழ்க்கைப் பயணத்தில் முக்கியமானது. நம் இதயத் துடிப்பை அளவிடும் கருவி கூட ஒரே நேர்கோட்டை காட்டினால் உயிரோடு இல்லை என்று அர்த்தம். **ரத்தன் டாடா**

# திருச்சி வயலூர் ரோடு ரெட்டி நல சங்கம் குடும்ப விழா




திருச்சி வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்க 2024ம் ஆண்டு குடும்ப விழா கடந்த அக்டோபர் மாதம் 6ம் தேதி அன்று திருச்சி ஹோட்டல் அஜந்தா திருமண மண்டபத்தில் இனிதே நடந்தேறியது.



இனிய விழாவிலே சுமார் நானூறுக்கும் மேற்பட்ட ரெட்டி இன மக்கள் தங்கள் குடும்பத்தார் மற்றும் குழந்தைகளோடு கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

விழாவிற்கு வயலூர் ரோடு ரெட்டி நலச் சங்கத்தலைவர் திரு.P.ஜனார்த்தனம் அவர்கள் தலைமை ஏற்றார். வயலூர் ரோடு ரெட்டி நலச் சங்கத்தின் செயலாளர் திரு.சி.ராஜேந்திரன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டவர்களை இனிதே வரவேற்றார்.

திருச்சி மாவட்ட ரெட்டி நலச்சங்கத் தலைவர் திரு.R.மனோகரன் அவர்களும், திருச்சி மாநகர ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.S.புண்ணியமூர்த்தி அவர்களும் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு மாநில ரெட்டி நலச்சங்கப் பொருளாளர் திரு.A.வேணுகோபால் என்கின்ற கண்ணன் அவர்கள், மேனாள் இந்திய வனப்பணி அலுவலர் திரு.வ.சுந்தரராஜு அவர்கள் எழுதிய ஆறு நூல்களை வெளியிட்டார்.

திருச்சி தேசியக்கல்லூரி, தமிழாய்வுத் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர். சா.நீலகண்டன் அவர்கள் 'வாழ்வே ஆனந்தம்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

குடும்ப விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்க செயலாளர் திரு.C.ராஜேந்திரன் அவர்கள் விழாவில் கலந்துக்கொண்ட சிறப்பு விருந்தினர்களையும், சிறப்புப்பேச்சாளரையும், முன்னாள் சங்கத்தலைவர் முனைவர். திரு.ராஜகோபால் அவர்களையும், ஆறு நூல்களை எழுதிய ஆசிரியரையும், விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த ரெட்டி இன சொந்தங்களையும், பிற ரெட்டி இன சங்கங்களில் இருந்து விழாவிற்கு வந்திருந்த சங்க உறுப்பினர்களையும் மனமுவந்து வரவேற்றார்.

வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்கத்தின் தலைவர் திரு.P.ஜனார்த்தனம் அவர்கள், வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்கத்தின் செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் குறித்து அவரது தலைமை உரையில் விரிவாக எடுத்துரைத்தார்.




முன்னிலை உரை ஆற்றிய திரு.R.மனோகர் அவர்கள் ஒரு ஜப்பானிய நிகழ்வினை மேற்கோள் காட்டி, ஒவ்வொருவரும் நேர்மறை சிந்தனைகளோடு விளங்க வேண்டும் என்றும், அப்படி இருந்தால் தான் நாம் வாழ்வில் சிறந்த சாதனைகள் புரிய முடியும் என்றும் விரிவாக உரை ஆற்றினார். அதுமட்டுமல்ல அந்த ஆய்வின் மூலம், தண்ணீருக்கும் உயிர் உண்டு



என்பதையும், பூமியில் வாழும் உயிர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் தண்ணீரை நாம் முறையாகப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் தெளிவாக விளக்கினார்.

திரு.S.புண்ணியமூர்த்தி அவர்கள் உலகெங்கும் வாழும் ரெட்டி இன சொந்தங்கள் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்றும், அவ்விதம் வாழ்ந்தால்தான் நமது சொந்தங்கள் உயர்ந்த நிலையை அடைந்து உலக அளவில் சாதனை புரிய முடியும் என்று எடுத்து இயம்பினார்.

தமிழ்நாடு ரெட்டி நலச்சங்கத்தின் பொருளாளர்



திரு.A.வேணுகோபால் என்கின்ற கண்ணன் அவர்கள், திரு.வ.சுந்தரராஜு, மேனாள் இந்திய வனப்பணி அலுவலர் அவர்கள் எழுதிய ஆறு நூல்களை வெளியிட்டு, குடும்பத்தில் நிலவும் பல்வேறு உறவுகள் குறித்த ஒரு சுவாரஸ்யமான விடுகதையோடு அவரின் உரையை நிறைவு செய்தார்.

அதைத்தொடர்ந்து, நூலாசிரியர் திரு.வ.சுந்தரராஜு, மேனாள் இந்திய வனப்பணி அலுவலர் அவர்கள், அவர் தம் ஏற்புரையில், அவர் எழுதிய 'Green Pearls of India' (English), 'Green Saviours of the Earth' (English) திருநெறி (கவிதை), காலநிலை மாற்றம் (தமிழ் அறிவியல்), புதுநெறி படைப்போம் (கவிதை), அன்பே தவம் (கவிதை) ஆகிய நூல்களைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அவரது பெரும்பாலான நூல்கள் அமேசான் (Amazon) நிறுவனத்தின் மூலம் இணைய வழியில் விற்பனைக்கு உள்ளன என்ற செய்தியையும் பகிர்ந்துக் கொண்டார். அவரின் இரண்டு ஆங்கில நூல்களும், காலநிலை மாற்றம் என்ற தமிழ் நூலும் அறிவியல் செய்திகள் நிறைந்தவை என்றும், 'திருநெறி' என்ற கவிதை நூலைப் படிப்பவர்களுக்கு மோட்சம் கிட்டும் என்றும் கூறினார்.

நிகழ்ச்சியின் சிறப்புப் பேச்சாளராக வந்திருந்த திருச்சி தேசியக்கல்லூரி தமிழ்த்துறையின் இணைப் பேராசிரியர் முனைவர்.சா.நீலகண்டன் அவர்கள் 'வாழ்வே ஆனந்தம்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் வாழ்வில் நடைபெற்ற சில சுவையான நிகழ்வுகளை எடுத்துக்கூறி, எப்படி நாம் வாழ்வை ஆனந்தமாக வாழவேண்டும் என்று நகைச்சுவையோடு உரையாற்றினார். தற்காலப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆனந்தம் என்ற பெயரில், எவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் நடந்து கொள்கின்றனர் என்றும், எப்படி கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு வாழவேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். அவரது உரையின் இடையே நமது ரெட்டி இன மக்களின் பெருமைகளைப்பற்றியும் அவர் நயம்பட எடுத்து இயம்பினார்.

நிகழ்ச்சியில், நமது சொந்தங்களின் பத்தாம் வகுப்பு முடித்த 8 குழந்தைகளுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. அதில் குறிப்பாக, நமது சங்க உறுப்பினர் திரு.C.விஜயன் அவர்களின் புதல்வன் திரு.V.கணேஷ் என்ற மாணவர் பத்தாம் வகுப்புத் தேர்வில் 500–க்கு 496 மதிப்பெண் பெற்று மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றதற்காக அவருக்கு ரூ.5000/- ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

அதே போன்று நமது சங்க உறுப்பினர்களின் 12ம் வகுப்பில் தேர்ச்சி அடைந்த 5 குழந்தைகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

75 அகவை முதிர்ந்த நமது சங்க உறுப்பினர்களில், மூன்று தம்பதிகளுக்கு நிகழ்ச்சியில் பொன்னாடை அணிவித்து அவர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களின் விருப்பத்திற்கேற்ற பரிசுகள் வழங்கப்பட்டன.

குடும்ப விழா நிகழ்வுகளை திரு.வ.சுந்தரராஜு அவர்கள் தொகுத்து வழங்கினார்.

நன்றி உரைக்குப் பின், இறுதியில் நாட்டுப்பண் இசைக்க, குடும்ப விழா இனிதே நிறைவுற்றது. விழா முடிவில் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சுவையான விருந்து அளிக்கப்பட்டது.



# விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்



விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க (பதிவு எண்.S.22/55) நிர்வாகக்குழு கூட்டம் 06.10.2024 (புரட்டாசி மாதம் 20ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை மதுரை மாவட்டம், கூவலப்புரம் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் ஜீவசமாது ஆலய வளாகத்தில் வைத்து காலை 11.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு.பெ.இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை யிலும், துணைத் தலைவர் திரு.இரா.ஜெயராம் ரெட்டியார் அவர்கள் மற்றும் சங்கப் பொருளாளர் திரு.இரா.முருகபூபதி முன்னிலை யிலும் நடைபெற்றது.

முன்னதாக இரண்டாவது முறையாக திரு.பெ.இராமகிருஷ்ணன் தலைவராகவும், திரு.இரா.ஜெயராம்ரெட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும், திரு.அ.கிருஷ்ணசாமி செயலாளராகவும், திரு.இரா.முருகபூபதி பொருளாளராகவும் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பதவியேற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் நமது சங்கம் செய்ய வேண்டிய செயல் திட்டங்கள் குறித்தும், தலைவரால் கொண்டு வரப்பட்ட பிற தீர்மானங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

விளாத்திகுளத்திலிருந்து கூவலப்புரம் செல்லவும், எட்டையபுரத்திலிருந்து கோவில்பட்டி வழியாக கூவலபுரம் செல்லவும் வாகன ஏற்பாடு செய்யப்பட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்துக் கொண்டனர்.

புதிய நிர்வாகிகளுக்கு முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் சால்வை அணிவித்து கௌரவித்தார்.

அதுசமயம் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.பெ.இராமகிருஷ்ணன் அவர்கள் "தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச் சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றிருக்கின்ற முனைவர் திரு.வீ.செல்வராஜு அவர்களை நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். அதுசமயம் "நம் தமிழக ரெட்டியார்களை பல்வேறு மாவட்டங்களிலும் அடையாளம் கண்டு ஒருங்கிணைத்தவர் முனைவர் திரு.வீ.செல்வராஜு. இவரது ஆய்வின் முடிவுகள் ஓபிசி பட்டியலில் ரெட்டி கஞ்சம் பிரிவை சேர்ப்பதற்கு பேருதவியாக அமையும். இத்தகைய வரலாற்று சாதனையைப் படைத்த நமது முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் திரு.வீ.செல்வராஜு அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்து வாழ்த்து தெரிவிப்பதில் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம் பெருமகிழ்ச்சி கொள்கிறது" என்றார்.



# போக நாடு ரெட்டி நல சங்க 36ஆம் ஆண்டு விழா




போக நாடு ரெட்டி நல சங்க 36ம் ஆண்டு விழா 29.09.2024 அன்று சென்னை, ஆலந்தூர் ஏ.ஜி.எஸ் நிதிப் பள்ளி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு போக நாடு ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.இரவிச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். அதுசமயம் TAKPON ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.M.V.வைத்தியலிங்கம், தெலுங்கு இனத் தலைவர் Dr.C.M.K.ரெட்டி, மதுரை திரு.பட்டாபி ரெட்டியார், ஆந்திர திரு.வீரமுரளி ரெட்டி, ரெட்டி முரசு ஆசிரியர் திரு.P.S.கந்தசாமி, முன்னாள் தலைவர் திரு.இராமதாஸ் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் போக நாடு ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.இரவிச்சந்திரன் அவர்கள் தமது தலைமை உரையில் பேசும் போது, "உத்திரமேரூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏறத்தாழ 300க்கும் அதிகமான குடும்பங்கள் போக நாடு ரெட்டி இனத்தைச் சேர்ந்தவர்களாக வாழ்ந்துக் கொண்டிருந்தவர்கள், தற்போது சென்னையை நோக்கி தொழில்ரீதியாக இடம்பெயர்ந்து ஏறத்தாழ 85 சதவீதத்தினர் தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் வர்த்தகரீதியாக தொழில்துறையில் வளர்ச்சி கண்டு வருகின்றோம். இது நம் வரலாறு. இந்த நிகழ்ச்சியில் சென்னையில் குடிப்பெயர்ந்தவர்கள் அனைவரும் கலந்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

நம் நிகழ்ச்சியில் தொடர்ந்து TAKPON ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.M.V.வைத்தியலிங்கம், தெலுங்கு இனத் தலைவர் Dr.C.M.K.ரெட்டி, மதுரை திரு.பட்டாபி ரெட்டியார் ஆகியோர் கலந்துக் கொண்டு நம்மை ஊக்கப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்தில் அவர்களை மனதார வரவேற்கிறேன்" என்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் பொதுக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து பேசிய தலைவர்கள் சமுதாய வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் நாம் ஒன்றாக இணைந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம் என்கிற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். மேலும் மருத்துவம், விவசாயம் இதரத் தொழில் துறைகளிலும் நாம் சிறந்து விளங்க இந்த சங்கம் முன்னெடுத்து செல்லும் அனைத்து நல்ல சேவைகளுக்கும் உறுதுணையாக இருப்போம் என உறுதி கூறினார்கள்.

நிறைவாக மதிய விருந்துடன் விழா இனிதே நிறைவேறியது.




## கண்ணீர் அஞ்சலி

திருவள்ளூர் மாவட்ட ரெட்டி நலச் சங்க கௌரவத் தலைவரும், பூவிருந்தவல்லி–திருவேற்காடு வட்டார ரெட்டி ஜன சங்க கௌரவ ஆலோசகருமான மூத்த வழக்கறிஞர் திரு.இரா.அருணாச்சலம் ரெட்டியார் அவர்கள் கடந்த 19.10.2024 அன்று மேட்டுபாளையம் கிராமத்தில் காலமானார்.

அன்னாரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தாருக்கும், திருவள்ளூர் மாவட்ட ரெட்டி நலச் சங்கத்திற்கும் ஆழ்ந்த இரங்கலை ரெட்டி மலர் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

## பொன்மொழி

நாம் மிகுந்த பசியோடிருக்கும்போதுதான் உண்ணும் உணவின் சுவையை அறிய முடியும். அதேபோல நமக்கு உண்மையான நண்பர்கள் மற்றும் உறவினர்களின் அருமையை நாம் ஆதரவின்றித் தனித்து விடப்பட்டிருக்கும் போதுதான் அறிய முடியும்.

# கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த ரெட்டி நல சங்கம் மகாசபை கூட்டம் மற்றும் கல்விப்பரிசு வழங்கும் விழா



கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த ரெட்டி நல சங்கம் மகாசபை கூட்டம் மற்றும் கல்விப் பரிசு வழங்கும் விழா 22–09–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இரணியமங்கலம், மேட்டுப்பட்டி, முத்துநகர், சீதாராஜாராம் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்றது.

ஆயுள் சந்தா உறுப்பினர் சேர்க்கை, வட்டார, நகர சங்கங்கள் ஆய்வு, கிராம கிளை சங்கங்கள் அமைத்தல், வரவு–செலவு அறிக்கை, தலைவரால் கொண்டுவரப்பட்ட இதர தீர்மானங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

நமது இன மக்கள் அனைவரும் கலந்துக் கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கு கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த ரெட்டி நல சங்க மாவட்ட தலைவர் திரு.C.பாலன் அவர்கள் தலைமை தாங்கினார். கரூர் மாவட்ட ரெட்டி சாரிட்டபுள் டிரஸ்ட் தலைவர் அட்வகேட் திரு.N.பாலன் B.A.B.L., அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் திரு.P.அசோக்குமார் B.Com., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட பொருளாளர் திரு.R.சரவணன் அவர்கள் வரவு செலவு அறிக்கையினை சமர்ப்பித்தார்.

தென்காசி மாவட்டம் மேலமருதப்புரம், விளாத்திக்குளம் ரெட்டி ஜன சங்க உறுப்பினர் வேங்கை செ.சந்திரசேகரன் அவர்கள் தேர்வில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

பாப்பாத்தியம்மாள்–பிச்சை கல்வி அறக்கட்டளை நிறுவனர் திரு.P.ராஜாராம் அவர்கள் மற்றும் மேட்டுப்பட்டி சீதாராஜாராம் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.R.மோகன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட இணைச்செயலாளர் திரு.K.தேவேந்திரன் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட துணைத்தலைவர்கள் திரு.M.R.ரெங்கராஜ், திரு.C.ஜெயராமன் திரு.P.ரமேஷ் திரு.P.துரைராஜ், மாவட்ட இணை செயலாளர்கள் திரு.K.தேவேந்திரன், திரு.G.மோதிலால் நேரு, திரு.P.ராஜு, திரு.S.பாஸ்கர், கரூர் நகரத் தலைவர் திரு.V.ரமேஷ், கரூர் நகரச் செயலாளர் திரு.J.சுந்தர்ராஜன், கரூர் நகர பொருளாளர் திரு.R.கருணாகரன், தான்தோன்றிமலை நகரத் தலைவர் திரு.V.ரெங்கநாதன் தான்தோன்றிமலை நகரச் செயலாளர் திரு.K.மாணிக்கம், தான்தோன்றிமலை நகர பொருளாளர் திரு.R.கோவிந்தசாமி, தான்தோன்றிமலை வட்டாரத் தலைவர் திரு.R.பாலசுப்பிரமணியம், செயலாளர் திரு.R.பாலசுப்பிரமணியன், பொருளாளர் திரு.G.சஞ்சீவி, மேற்கு K.R.புரம் வட்டாரத் தலைவர் திரு.V.பிரகாஷ், செயலாளர் திரு.S.வெங்கடேசன், பொருளாளர் திரு.E.மோகன்குமார், கிழக்கு K.R.புரம் வட்டாரத் தலைவர் திரு.P.தேவராஜ், செயலாளர் திரு.R.ஜெகநாதன், பொருளாளர் திரு.S.பிரபு, குளித்தலை வட்டாரத் தலைவர் திரு.B.அருணாச்சலம், செயலாளர் திரு.R.நாகராஜன், பொருளாளர் திரு.P.சுரேஷ், தோகைமலை வட்டாரத் தலைவர் திரு.P.பாலு (எ) வேலுசாமி, செயலாளர் திரு.P.சேது, பொருளாளர் திரு.R.சேகர், கடவூர் வட்டாரத் தலைவர் திரு.N.நடராஜன், செயலாளர் திரு.M.நம்பெருமாள், பொருளாளர் திரு.C.பெருமாள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வெள்ளியணை ஸ்ரீ அமராவதி கலை & அறிவியல் கல்லூரி–ரூ.10,000/-, கரூர், ஸ்ரீநிவாசபுரம் திரு.R.சேதுராமன்–ரூ.5,000/-,கரூர் ஒருங்கிணைந்த ரெட்டி நலச்சங்கம், LIC நகரத் தலைவர், திரு.V.ரமேஷ் – ரூ.5,000/-, தான்தோன்றிமலை ஒருங்கிணைந்த ரெட்டி நலச் சங்கம், நகரத் தலைவர் திரு.V.ரெங்கநாதன்–மணிமேகலை–ரூ.5,000/-, கரூர் மாவட்ட OPR சாரிட்டபுள் டிரஸ்ட்–ரூ.5,000/- கிருஷ்ணராயபுரம் மேற்கு வட்டார நிர்வாகிகள் –ரூ.5,000/- என நிர்வாகிகள் கல்வி பரிசுத் தொகையினை நன்கொடைகளாக வழங்கினர்.

# அருப்புக்கோட்டை ஓபிஆர் ரெட்டி நல உறவின் முறை சங்கத்தின் 13ம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 14ம் ஆண்டு துவக்க விழா




அருப்புக்கோட்டை OPR ரெட்டி நல உறவின் முறை சங்கத்தின் 13ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் 14ம் ஆண்டு துவக்கவிழா 29.09.2024 பிற்பகல் ராஜீவ் நகர் வெங்கடேஸ்வரா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு.R.நாராயணன் அவர்கள் தலைமை வகித்தார். சங்கத்தின் சிறப்பு அழைப்பாளராக கல்வியாளர் திரு.A.J.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

சங்கத்தின் கடந்த ஓர் ஆண்டு செயல்பாடு குறித்து சங்கத்தின் செயலாளர் திரு.R.D.ராஜமுருகன் அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

சங்கத்தின் பொருளாளர் திரு.K.நாகேந்திரன் அவர்கள் சங்கத்தின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தார்.

சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 10 மற்றும் 12ம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் கல்விப்பரிசு வழங்கப்பட்டது.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கல்வியாளர் திரு.A.J.ராஜேந்திரன் அவர்கள் கல்வியின் அவசியம் மற்றும் கல்வியின் எதிர்காலம் குறித்து உரை நிகழ்த்தினார்.

வங்கி மற்றும் காப்பீடு தொடர்பான துறை சார்ந்தவர்கள் மூலம் அந்த துறை குறித்த தற்போதைய நிலை விவரித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சங்கத்தின் திருமண தகவல் சேவையை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

OBC சான்றிதழ் பெறுதல் அவசியம் குறித்து விவாதிக்கப்பட்டது. OBC சான்றிதழ் பெற அதிகாரம் தற்போது மாநில அரசின் வசம் இருப்பதால் விரைவில் இது தொடர்பாக மாநில சங்கத்தின் ஆலோசனைப்பெற்று நடவடிக்கை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

தேசிய கீதம் பாடப்பெற்று இரவு உணவு விருந்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

# கூடுவாஞ்சேரி ரெட்டி நலச் சங்கம்

செங்கற்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 15-09-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கத் தலைவர் திரு.D.விஜயகுமார் ரெட்டி அவர்கள் தலைமையில், கூடுவாஞ்சேரி நெ.19.கே.கே.நகர் முதல் மெயின் ரோடில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவர் திரு.D.விஜயக்குமார் ரெட்டி அவர்கள் வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார். கடந்த 25-08-2024 அன்று நடைபெற்ற சென்னை மாகாணத்தின் முதல் முதல்வர் ஓபிஆர் அவர்களின் 54வது நினைவு நாள் அன்று நடைபெற்ற நினைவு அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கும், காஞ்சி–செங்கை மாவட்ட பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் செயலாளர் திரு.S.பாலகிருஷ்ணன் ரெட்டி அவர்கள் நன்றி தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

ஓபிஆர் நினைவு நாள் அன்று அன்னதானம் வழங்க மேற்பார்வை செய்த இளைஞர் அணித் தலைவர் திரு.சந்திரபாபு ரெட்டி அவர்களுக்கும் ஓபிஆர் நினைவு நாள் விழா சிறக்க பந்தல் அமைத்து கொடுத்த திரு.தனசேகர் ரெட்டி ஆகியோருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொருளாளர் திரு.லட்சுமிபதி ரெட்டி சிறப்புரையாற்றும் போது, ஓபிஆர் நினைவு நாளன்று அன்னதானம் வழங்க உதவிய நன்கொடையாளருக்கு நன்றி தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

கூட்ட முடிவில் இளைஞர் அணித்தலைவர் திரு.சந்திரபாபு ரெட்டி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

தகவல் திரு.S.பாலகிருஷ்ணன் ரெட்டி,
செயலாளர், கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கம்

# தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் பேரவைக் கூட்டம்



24.09.2024 மதியம் 2.30 மணி அளவில் கடலூர் ஸ்ரீ திவான் பகதூர் சுப்பராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் பேரவைக் கூட்டத் தலைவர் கிளியனூர் திரு.K.V.முத்துமல்லா ரெட்டியார் தலைமையில், செயலாளர் திரு.M.இரவிச்சந்திரன் ரெட்டியார் முன்னிலையில், துணை தலைவர் திரு.M.V.வைத்திலிங்க ரெட்டியார் சிறப்புரையுடன் நடைபெற்றது. கூட்டத்தில் புதுச்சேரி பிரதேச ரெட்டி நலச் சங்க தலைவர் திரு.இராமச்சந்திர ரெட்டியார் உள்பட பெருந்திரளான ரெட்டி சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

கூட்டத்தில் பேசிய செயற்குழு உறுப்பினர் திரு.ரகுபதிரெட்டி, திண்டிவனத்தில் புதியதாக திறக்கப்படவுள்ள பேருந்து நிலையத்திற்கு உத்தமர் ஓபிஆர் பெயரைச்சூட்ட தமிழக அரசை தென்னிந்திய ரெட்டி ஜன சங்கம் வலியுறுத்த வேண்டும் என வலியுறுத்தினார். தொடர்ந்து தலைவர் திரு.முத்துமல்லா ரெட்டியார் அவர்கள் முன்மொழிய செயலாளர் திரு.இரவிச்சந்திர ரெட்டியார் வழிமொழிய திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திற்கு உத்தமர் ஓபிஆர் பெயரை சூட்ட தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் சார்பில் தமிழக அரசை வலியுறுத்தும் தீர்மானம் அனைவரின் ஏகோபித்த ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது .

தமிழக அரசின் 2024ம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருது பெற்ற திண்டிவனம், ஜெயபுரத்தை சேர்ந்த கொள்ளார் திரு.R.பாபு ரெட்டியாரின் துணைவியாரும், திண்டிவனம் மாண்ட்போர்ட் மெட்ரிக் மேல் நிலை பள்ளியில் 30 ஆண்டுகளாக தமிழ் ஆசிரியையாக பணியாற்றி வரும் திருமதி.B.தாட்சாயணி ரெட்டி, B.Lit, MA., B.Ed., M.Phil., அவர்கள், சங்க துணைத் தலைவர் புதுவை திரு.வைத்திலிங்க ரெட்டியாரால் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார். செயற்குழு உறுப்பினர் திரு.ரகுபதி ரெட்டியார் பேசும் போது நம் இனத்தில் சிறப்பாக சேவையாற்றி, நம் இனத்திற்கு பெருமை சேர்த்த திருமதி. தாட்சாயணி ரெட்டி மிகுந்த போற்றுதலுக்கு உரியவர் என்று பாராட்டி பேசினார். தலைவர் திரு.முத்துமல்லா ரெட்டி பொன்னாடை போர்த்தி திருமதி.தாட்சாயணி ரெட்டியை சிறப்பித்தார். செயலர் திரு.இரவிச்சந்திர ரெட்டி, கொள்ளார் திரு.பாபு ரெட்டியாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார் .

திரு.G. கிருபாகரன் ரெட்டி ,

செயலாளர், டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கம், திண்டிவனம் .

# மதுரை விருதுநகர் மாவட்ட ரெட்டி நலச்சங்க ஆண்டு விழா

மதுரை விருதுநகர் மாவட்ட ரெட்டி நலச் சங்கம் மற்றும் கல்வி பொது நல அறக்கட்டளை சார்பாக வாடிப்பட்டியில் 5ம் ஆண்டு ரெட்டியார் மணமாலை சங்க அறக்கட்டளை செயலி துவக்க விழா நடந்தது. நிர்வாக இயக்குனர் தலைவர் திரு.பாலகுரு தலைமை வகித்தார்.

செயலாளர் திரு.ராமநாதன், மாவட்ட பொறுப்பாளர் திரு.சதீஷ்குமார், பொருளாளர் திரு.ரவிச்சந்திரன், வட்டாரத் தலைவர் திரு.செந்தில்குமார் முன்னிலை வகித்தனர்.

வட்டார ஒருங்கிணைப்பாளர் திரு.பாலாஜி வரவேற்றார். சங்க மாவட்டத்தலைவர் திரு.ராஜாபூர்ணசந்திரன் செயலியை துவக்கி வைத்தார். வாடிப்பட்டி யூனியன் சேர்மன் திருமதி.மகாலட்சுமி மணமாலை நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். வட்டார செயலாளர் திரு.சீதாராமன், அறக்கட்டளை பொருளாளர் திரு.பாலகிருஷ்ணன் உரையாற்றினார்கள். தகவல் மைய பொறுப்பாளர் திரு.பாண்டியராஜ் மற்றும் வட்டார பொருளாளர் திரு.ராமகிருஷ்ணன் விழாவினை ஒருங்கிணைத்தனர்.

**வெற்றியின் படிகள் உயரமாக இருந்தாலும் அதை தாண்ட நினைக்கும் எண்ணம் பெரிதாய் அமைந்தால்... இலக்கை அடைந்து வெற்றி காணலாம்..!!**

## யோகாவில் கின்னஸ் உலக சாதனை புரிந்த மாணவர்களுக்கு காஞ்சி சங்கர மடம் வாழ்த்து



இந்த வருடம் சென்னையில் நடந்த கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளின் துவக்க விழாவில் மாண்புமிகு பாரத பிரதமரும், மாண்புமிகு தமிழக முதல்வரும் கலந்து கொண்ட நிகழ்வில் தமிழக விளையாட்டுத் துறையின் சார்பில் யோகாவில் கின்னஸ் உலக சாதனை நிகழ்த்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட மின்னல் கிஷன்ஸ்ரீ மற்றும் நளன்ஸ்ரீ மிகச் சிறப்பாக யோகா செய்து மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை நிகழ்த்தினர்.

காஞ்சி மடத்தில் இன்று நடந்த திருக்கோயில் வழிபாட்டுக்குழுவின் 15 ஆம் ஆண்டு விழாவில் சிறுவர்களை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் ஆசீர்வதித்து பாராட்டி வாழ்த்தினார். இந்த சிறுவர்கள் 2019ம் ஆண்டில் இரண்டாயிரம் தமிழ் பாடல் வரிகளை மனப்பாடமாய் கூறி உலக சாதனை நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பல சாதனைகள் புரிய ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகிறோம்.

## திருவண்ணாமலை ரெட்டி நல சங்கம்



திருவண்ணாமலை ரெட்டி நல சங்கங்களின் பொதுக்குழு கூட்டம் 04.09.2024 அன்று திருவண்ணாமலை போகநாட்டு ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.தனகோட்டி ரெட்டியார் அவர்கள் தலைமையில் திரு.வீரமணி ரெட்டியார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை பெரு மண்டல தலைவர் திருஇரா.ஜெயராமன் ரெட்டியார் அவர்களும், மாநில பொதுச்செயலாளர் திரு.கி.ஜனகராஜன் அவர்களும், விழுப்புரம் வடக்கு மாவட்டத் தலைவர் திரு.ஆர்யாஸ் ராமகிருஷ்ணன் அவர்களும், திருவண்ணாமலை ரெட்டி நல சங்க நிர்வாகிகளும், இளைஞர் அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

சங்க நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று சென்னை திரு.இரா.ஜெயராமன் ரெட்டியார் 3 மாணவர்களின் கல்விக்கான உதவித்தொகை வழங்க ஏற்றுக் கொண்டார். சான்றிதழ் பெறுவதில் நிலவுகிற சிக்கல்களுக்கு தீர்வு காணவேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

திருவண்ணாமலை மாவட்டச்சங்கங்கள் அனைத்தும் தமிழ்நாடு சங்க முயற்சிகளுக்கு உறுதுணையாய் என்றும் நிற்போம் என்று உறுதியளித்தனர். கூட்டம் காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 வரை நடைபெற்றது. திரு.வீரமணி ரெட்டியார் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# சித்தாமூர் ரெட்டி நலச் சங்கம் சார்பில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம்



சித்தாமூர் வட்டார ரெட்டி நலச்சங்க முன்னாள் தலைவர் திரு.P.R.பத்மநாப ரெட்டியார் அவர்களின் 4ம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி பாரத பிரதமரின் தேசிய திட்டத்தின் கீழ் ஏழை மாணவர்கள் நலச் சங்கம் மின்னல், மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், காஞ்சிபுரம் (DBCS) மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை (உலகத்தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்) இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் பரிசோதனை கண்புரை அறுவை சிகிச்சைத் தேர்வு முகாம் 18.09.2024 புதன்கிழமை, காலை 9.00 மணிமுதல் 1.00 மணி வரை ஏழை மாணவர்கள் நலச்சங்க அலுவலகம், மின்னல் கிராமத்தில் நடைபெற்றது.

கண்புரை நோய் உள்ள ஏழை எளிய மக்களுக்கு சங்கரா கண் மருத்துவமனையில் விழிலென்ஸ் (IOL) பொருத்தும் அறுவை சிகிச்சை அத்துடன் போக்குவரத்து, தங்கும் வசதி, உணவு உட்பட அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டது.

கண்புரை உள்ளவர்கள் முகாம் அன்றே அறுவை சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டு அறுவை சிகிச்சைக்கு பிறகு அவர்கள் மீண்டும் முகாம் நடந்த இடத்திற்கே திரும்பி அழைத்து வந்து விடப்பட்டனர்.

அன்னதான கொடையாளர்கள் சித்தாமூர் வட்டார ரெட்டி நல சங்க உறுப்பினர்கள்.

தகவல் – மின்னல் திரு.மு.ஸ்ரீதர், சித்தாமூர்

# செங்கல்பட்டு நகர ரெட்டி நலச் சங்க பொதுக் குழுக் கூட்டம்



திரு.V.விஜயகோபால் ரெட்டி
தலைவர்



திரு.K.பரந்தாமன் ரெட்டி
செயலாளர்



திரு.J.கோபாலகிருஷ்ண ரெட்டி
பொருளாளர்



திரு.R.பிரபு ரெட்டி
இளைஞரணி தலைவர்

செங்கல்பட்டு நகர ரெட்டி நலச் சங்க பொதுக்குழுக்கூட்டம் 01.09.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை ஞான ஜோதி RKN பள்ளியில் மாவட்டத் தலைவர் திரு.D.விவேகானந்த ரெட்டி அவர்கள் தலைமையில், மாவட்ட இணைச் செயலாளர் திரு.R.சீனிவாச ரெட்டி முன்னிலையில் நடைபெற்றது. அதில் சங்க புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செங்கல்பட்டு நகரத் தலைவராக திரு.V.விஜயகோபால் ரெட்டி அவர்களும், செயலாளராக திரு.K.பரந்தாமன் ரெட்டி அவர்களும், பொருளாளராக திரு.J.கோபால கிருஷ்ண ரெட்டி அவர்களும், இளைஞரணி தலைவராக திரு.R.பிரபு ரெட்டி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

முன்னாள் தலைவர் திரு.V.வெங்கட பெருமாள் ரெட்டி, செயலாளர் திரு.R.ஜெய்சங்கர் ரெட்டி ஆகியோர் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்கள். முன்னாள் பொருளாளர் திரு.ரமேஷ் ரெட்டி அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் நிறைவடைந்தது.

# காஞ்சி வட்டார ரெட்டி நலச் சங்கம்



காஞ்சி வட்டார ரெட்டி நலச்சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா கடந்த அக்டோபர் 14, 2024 திங்கட்கிழமை அன்று மாலை 5-00 மணி அளவில் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் எதிரில் உள்ள அபிராமி ஹோட்டல் பார்ட்டி ஹாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் காஞ்சி–செங்கை மாவட்ட ரெட்டி நலச் சங்கத் துணைத்தலைவர் திரு.T.துரைபாபு ரெட்டி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். காஞ்சி வட்டார ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.P.ரெங்கநாத ரெட்டி அவர்கள் முன்னிலை வகித்து தலைமையுரை ஆற்றினார்.

காஞ்சி–செங்கை மாவட்ட ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.D.விவேகானந்த ரெட்டி அவர்கள் புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். காஞ்சிபுர மாநகரம் துணை மேயர் திரு.R.குமரகுருநாதன் ரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு மகிழ்வுரை நிகழ்த்தினார்.

காஞ்சி செங்கை மாவட்ட ரெட்டி நலச்சங்க செயலாளர் திரு.S.தேவதாஸ் ரெட்டி, பொருளாளர் திரு.S.பூபாலன் ரெட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிதாக பதவியேற்றுக் கொண்ட காஞ்சி வட்டார ரெட்டி நலச்சங்கத்தலைவர் திரு.K.தாமோதர ரெட்டி அவர்கள் ஏற்புரை வழங்கினார். காஞ்சி வட்டார ரெட்டி நலச்சங்கத் பொருளாளர் திரு.K.ரகோத்தமன் ரெட்டி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

காஞ்சிபுரம் வட்டார ரெட்டி நலச்சங்கத் தலைவர் திரு.K.தாமோதர ரெட்டி, செயலாளர் திரு.K.பாஸ் கரன் ரெட்டி, பொருளாளர் திரு.K.ரகோத்தமன் ரெட்டி ஆகியோர் விழாவுக்கான சிறப்பான ஏற் பாடுகளை செய்ததோடு அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தனர்.

காஞ்சிபுரம் வட்டார ரெட்டி நலச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

கௌரவத் தலைவர்களாக திரு.P.ரெங்கநாத ரெட்டி, திரு.S.வெங்கட்ராம ரெட்டி ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். தொடர்ந்து காஞ்சிபுரம் வட்டாரத் தலைவராக திரு.K.தாமோதர ரெட்டி அவர்களும், துணைத்தலைவராக திரு.A.S.ரவிச்சந்திர ரெட்டி அவர்களும் பதவியேற் றுக் கொண்டனர்.

காஞ்சிபுரம் வட்டார சங்க செயலாளராக திரு.E.K.பாஸ்கர ரெட்டி அவர்கள் பதவி பிர–மாணம் எடுத்துக் கொண்டார். வட்டார இணைச் செயலாளராக திரு.R.ராமமூர்த்தி ரெட்டி அவர்கள் பொறுப்பேற்றார்.

காஞ்சிபுரம் வட்டார சங்கப் பொருளாளராக திரு.K.ரகோத்தமன் ரெட்டி அவர்களும், இணைப் பொருளாளராக திரு.R.ரகுபதி ரெட்டி அவர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

காஞ்சிபுரம் வட்டார சங்க ஆலோசகராக திரு.B.துளசிதாஸ் ரெட்டி அவர்களும், சங்க ஒருங்கிணைப்பாளராக திரு.D.சீனுவாச ரெட்டி அவர்களும் பதவியேற்றனர்.

காஞ்சிபுரம் வட்டார சங்க செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களாக திரு.K.ரமேஷ் ரெட்டி, திரு.S.ரமணதாஸ் ரெட்டி, திரு.D.மோகன் ரெட்டி, திரு.G.ரங்கநாதன் ரெட்டி, திரு.M.சந்திரசேகரன் ரெட்டி, திரு.J.யோகேந்திரன் ரெட்டி, திரு.M.S.ராஜா ரெட்டி, திரு.N.ராதாகிருஷ்ணன் ரெட்டி, திரு.P.வீரராகவ ரெட்டி, திரு.K.தனசேகரன் ரெட்டி , திரு.R.ரமேஷ் ரெட்டி, திரு.M.பரமநாதன் ரெட்டி, திரு.சந்தானம் ரெட்டி, திருமதி.V.கலைவாணி ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட துணைத் தலைவர் திரு.T.துரைபாபு ரெட்டி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் திரு.S.ஆனந்தகுமார் ரெட்டி, மாவட்ட பொதுக் குழு உறுப்பினர் திரு.D.மோகன்ராஜ் ரெட்டி, சட்ட ஆலோசகர்கள்திரு.G.கண்ணதாசன் ரெட்டி MABL., திரு.K.லட்சுமிபதிரெட்டி BABL. ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

நிறைவாக பொருளாளர் திரு.K.ரகோத்தமன் ரெட்டி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

இரவு விருந்துடன் பதவியேற்பு விழா இனிதே நிறைவேறியது.

# ரெட்டியார் டிரஸ்ட் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்






திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் அமைந்துள்ள ரெட்டியார் டிரஸ்ட் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து கடந்த அக்டோபர் 6, 2024 ஞாயிறு அன்று சமயபுரம் சர்வீஸ் ரோட்டில் அமைந்துள்ள ரெட்டியார் மஹாலில் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ரெட்டியார் டிரஸ்ட் தலைவர் திரு.A.ராஜாசிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கினார். ரெட்டியார் டிரஸ்ட் செயலாளர் திரு.V.R.R.தமிழ்செல்வன், முகாம் பொறுப்பாளர் திரு.P.ராகவன், ஒருங்கிணைப்பாளர் திரு.S.செல்வகுமார் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்ச்சியின் போது கண்புரை, சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கான விழித்திரை பரிசோதனை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து போன்ற பார்வை கோளாறுகளுக்கான பரிசோதனை செய்யப்பட்டது.

இரத்த அழுத்த நோய், ஆஸ்துமா, சர்க்கரை நோய், இதய நோய் உள்ளவர்கள் கண் புரை அறுவை சிகிச்சைக்கான தகுதிச் சான்று பெற்று வர முன்னதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

ரெட்டியார் டிரஸ்ட் தலைவர் திரு.A.ராஜாசிதம்பரம் அவர்கள் கண் ஆரோக்கியம் மற்றும் கண் பரிசோதனைப் பற்றி நன்றி தெரிவித்து நிறைவாக பேசும் போது, “தெளிவான பார்வை ஒரு பிரகாசமான நிறைவான வாழ்க்கைக்கு முக்கியமாகும் என்பதை உணர்த்த இந்தப் பகுதியில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு ரெட்டியார் டிரஸ்ட் சார்பில் எந்த கட்டணமும் இல்லாமல் ஒரு விரிவான கண் பரிசோதனை முகாம் நடத்த அறிவிக்கப்பட்டு விளம்பரம் செய்திருந்தோம்.

இதில் கண்புரை, கிளௌக்கோமா மற்றும் ஒளிவிலகல் பிழைகள் போன்ற சிக்கல்களை அடையாளம் காணுவதற்கான பரிசோதனையும், தேவைகளின் அடிப்படையில் கண் ஆரோக்கியத்தை எவ்வாறு பராமரிப்பது மற்றும் மேம்படுத்துவது என்பதற்கான ஆலோசனை–களையும் நிகழ்ச்சியின் போது கண் மருத்துவர்கள் சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இன்றைய தினம் 257 பயனாளிகள் கலந்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான இலவச கண் பரிசோதனையின் போது சிகிக்சைக்காக 68 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறார்கள். மற்றும் கண் பரிசோதனை செய்து கொண்ட 58 பேருக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கு இந்த நிகழ்ச்சியில் உறுதுணையாக இருந்த மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை முகாம் பொறுப்பாளர் திரு.S.செல்வகுமார் அவர்களுக்கும், முகாம் பொறுப்பாளர் திரு.இராகவன் அவர்களுக்கும், செயலாளர் திரு.V.R.R.தமிழ்செல்வன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் “ என்றார்.

–தகவல் திரு.A. ராஜாசிதம்பரம்
தலைவர், ரெட்டியார் டிரஸ்ட், சமயபுரம்

# துறையூர் பெருமாள் மலை ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் அன்னதான விழா

துறையூர் நகர ரெட்டி நல சங்கம், ரெட்டி இளைஞர் பேரவை முன் நின்று நடத்தும் அன்னதான விழா நடைபெற்றது.

மிகச் சிறிய அளவில் ரெட்டி இளைஞர் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டு நம் இன சொந்தங்கள் கொடுத்த பேராதரவுடன் தற்போது சுமார் 2000 பேருக்கு அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. நம் இன சொந்தங்கள் அனைவரும் இந்த இரண்டாவது புரட்டாசி 28.09.2024 சனிக்கிழமை அன்று பெருமாள் மலை அடிவாரத்தில் ஸ்ரீவெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடந்த அன்னதான விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

உறுப்பினர்களின் குடும்பத்தினரும் இந்த அன்னதான விழாவில் பங்கேற்று பெருமாள் அருளை பெற்று சென்றனர். நம் இன சொந்தங்கள் பொருளுதவியும், நிதி உதவியும் வழங்கி சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளுக்கான தொடர்பாளர்களாக திரு.கோவிந்தராஜ், திரு.சிவானந்தம், திரு.தியாகராஜன் மற்றும் மகளிர் அணியினர் அறிவிக்கப்பட்டிருந்தனர்.

துறையூர் ரெட்டி சமுதாய அன்னதான கமிட்டி

# கரூர் தான்தோன்றிமலை பொன்கலை நாட்டு நலச் சங்க 25வது மகாசபை கூட்டம் மற்றும் கல்விப் பரிசளிப்பு விழா






கரூர் தான்தோன்றிமலையில் பொன்கலை நாட்டு நலச்சங்க கரூர் ஆடிட்டர் N.ராமானுஜம் நினைவு திருமண அரங்கம், பொன்கலை நாட்டு ரெட்டி நலச் சங்க கரூர் P.K.ராமானுஜம் நினைவு வணிக வளாகத்தில் பொன்கலை நாட்டு ரெட்டி நலச்சங்கத்தின் 25-வது மகாசபை கூட்டம் மற்றும் கல்விப் பரிசு வழங்கும் விழா 29.9.2024 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராகப் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் திருச்சி திரு.E.வேலுச்சாமி அவர்கள் கலந்துக் கொண்டு மாணவ, மாணவிகளை பாராட்டியும், பரிசுகள் வழங்கியும் சிறப்புரையாற்றினார்.

பரிசளிப்பின் போது பொன்கலை நாட்டு ரெட்டி நலச்சங்கத்தின் தலைவர் திரு.R.சஞ்சீவி, செயலாளர் திரு.C.பாலன், பொருளாளர் திரு.R.வெங்கடாசலம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கரூர் திரு.G.துரைராஜ், திரு.V.ரமேஷ், வெங்கமேடு கரூர் திரு.G.கோபால், காந்தி கிராமம் வடக்கு திரு.S.வீராச்சாமி, காந்தி கிராமம் தெற்கு திரு.Dr.S.மதுசங்கர், திண்ணப்பாநகர் காந்தி கிராமம் திரு.S.பார்த்திபன், சுங்ககேட் திரு.S.R.எத்திராஜ், கங்காநகர் கருப்பகவுண்டன் புதூர் திரு.R.கோவிந்தசாமி, அசோக்நகர், தான்தோன்றிமலை திரு.N.விஜயபாஸ்கர், ஜீவாநகர் கணபதிபாளையம் திரு.T.கோபால், திரு.K.ஜீவானந்தம், தாந்தோன்றிமலை தெற்கு திரு.N.சந்திரசேகரன், மேலலட்சுமணபட்டி திரு.V.குருநாதன், சாலப்பட்டி பாப்புரெட்டியூர் திரு.B.கரிகாலன், மேலவடுகப்பட்டி திரு.V.P.ரெங்கராஜ், வடுகப்பட்டி திரு.R.முருகேசன், மேட்டாங்கிணம் திரு.R.துரைராஜ், கோரகுத்தி நத்தமேடு திரு.R.ஜெயபாலன், சங்கரமலைப்பட்டி திரு.R.சந்திரசேகர், சின்னமலைப்பட்டி திரு.R.மஞ்சுளா, குண்டாலப்பட்டி திரு.P.கோவிந்தசாமி, சேங்கல் திரு.K.ஸ்ரீதர், கீழடை சேங்கல்மேலப்பண்ணை திரு.P.கருப்பன், முனையனூர் திரு.G.மோதிலால், முத்தலாடம் பட்டி தான்தோன்றிமலை திரு.S.பாஸ்கர், உடையகுளத்துப்பட்டி திரு.R.ராதாகிருஷ்ணன், தான்தோன்றிமலை கிழக்கு திரு.V.ரெங்கநாதன், அழகாபுரி பூவம்பாடி திரு.V.ராமானுஜம், மேலப்பண்ணை மடையப்ப நா.பட்டி திரு.R.தினேஷ்குமார், மடையப்ப நாயக்கன்பட்டி திரு.T.கென்னடி, குப்பமேட்டுப்பட்டி திரு.V.வேலுச்சாமி, பள்ளத்தோட்டம் திரு.N.சீத்தாராமன், லந்தக்கோட்டை திரு.S.கனகராஜ், லந்தக்கோட்டை புதூர் திரு.L.G.இராதாகிருஷ்ணன், வீரியப்பட்டி திரு.V.P.மருதை, துளசிக்கொடும்பு ஜெகதாபி திரு.K.சந்திரன், திருமலைநாதன்பட்டி திரு.G.ஸ்ரீதர், பொரணி திரு.P.விவேகானந்தன், சுப்புராயரெட்டியூர் திரு.R.பாலசுப்பிரமணியம், பழையஜெயங்கொண்டம் திரு.K.மணிவேல், கீழலட்சுமணம்பட்டி திரு.R.பாலசுப்பிரமணியன், M.புதுப்பட்டி குரும்பப்பட்டி திரு.S.வெங்கடேசன், குப்புரெட்டிப்பட்டி திரு.A.நாராயணசாமி, அந்தரப்பட்டி திரு.N. சின்னசாமி, கணக்கம்பட்டி திரு.C.சுதித்ராஜ், கணக்கப்பிள்ளையூர் திரு.P.நாராயணன், குப்பாச்சிப்பட்டி ஆலமரத்துப்பட்டி திரு.R.ரெங்கநாதன், M.சீத்தப்பட்டி திரு.R.ராஜகோபால், வையம்பட்டி திரு.V.குமார் உள்ளிட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டனர்.

**ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை நற்குணம் தனக்குத்தானே உண்மையாக இருப்பது**

## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றிச் செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம். ஆசிரியர்.

# தலைவர்களாகுங்கள், நாளை வழிநடத்துங்கள்

நமது சமுதாயத்தில் எதிர்காலத்திற்கான நல்ல தலைவர்கள் உருவாக வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

ஓர் சங்கம் என்பது அதன் உறுப்பினர்களின் பொதுவான நோக்கங்கள் ஈடேறும் வகையில் அவர்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட உருவாக்குவதே ஆகும். எந்த ஒரு சங்கத்திற்கும் நல்ல தலைவர்கள் தேவைப்படுகின்றனர். ஏனென்றால் அந்த சங்கத்தின் முன்னேற்ற பாதைக்கு அடிகோலுபவர்கள் அவர்களே. சங்கங்களின் வெற்றியை தீர்மானிப்பதும் சரியான தலைவர்களே.

பொதுநலத்தில் ஈடுபட்டுள்ள அனைவராலும் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து வழிநடத்திச் செல்ல இயலாது. அதற்கென தலைமை பண்பு திறன்கள், தகவல் பரிமாற்ற திறன்கள், அனைவரையும் அரவணைத்துச் செல்லுதல், அமைப்பின் நோக்கங்களை சரியாக புரிந்து வைத்திருத்தல், செயல்பாடுகள் ஒவ்வொன்றிக்கான முழு அறிவினைப்பெறுதல், நன்னடத்தை, நேர மேலாண்மை, நெருக்கடி கால மேலாண்மை என பல பண்புகள் தேவைப்படுகின்றன. இத்தகைய பண்புகளை நமது இளந்தலைமுறையினர் வளர்த்துக்கொள்ளவேண்டும். இவற்றை சற்று விரிவாக காண்போம்.

### தலைமை பண்பு வளர்ச்சியில்

உறுப்பினர்களின் கருத்துகளுக்கு செவிமடுத்தல், நேரம் தவறாமை, படித்தலுக்கும் எழுதுதலுக்கும் தினமும் நேரம் செலவழித்தல், பணிகளைப் பிரித்தளித்தல், தேவையின் போது அதிகாரத்தை செயல்படுத்துதல், போராட்டங்களை நடைமுறைப்படுத்தும்விதம், ஆபத்தில் உதவுதல் போன்றவை அடங்கும்.

### தகவல் தொடர்பு திறன்களில்

உறுப்பினர்களின் விருப்பத்தை அறிதல், கருத்துகளை தாக்கம் ஏற்படும் வகையில் கூறுதல், முதன்மை கருத்துகளை திரும்பத் திரும்பக் கூறுதல், பிரச்னை எனில் உடன் வருதல், உணர்வுகளை வெளிப்படுத்துதல், உறுப்பினர்களுடன் தொடர்ச்சியான தொடர்புகள், வெற்றியினை குழுவாக கொண்டாடுதல் போன்றவை அடங்கும்.

### தலைமைக்கான திறன்களில்

குறைந்த பேச்சு அதிக செயல், துரித செயல்பாடு, செயல்பாடுகளுக்கு கால அவகாசம் நிர்ணயித்தல், உறுப்பினர்களிடையே வளர்ச்சியை பற்றி தெரிவித்தல் ஆகியவை அடங்கும்.

### நடத்தையில்

எப்போதும் புன்னகையுடன் இருத்தல், செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, மனிதநேயம், நளினம், எளிமை, உண்மையே பேசுதல், புறம் பேசாமை, நேர்மறையான எண்ணம், எதிர்கருத்துகளை அமைதியாக கையாளுதல், சரியில்லா நபர்களிடம் செலவிடும் நேரத்தை குறைத்தல் போன்றவை அடங்கும்.

### ஆதாரம் திரட்டுதல்

சங்கத்தின் பொது செயல்பாடுகளை நிறை



வேற்ற தேவைப்படும் ஆதாரங்களை திரட்டுவது தலைமை பொறுப்பாளர்களின் மிக முக்கியமான பணி. ஆதாரங்கள் என்பது நிதி சேகரிப்பு மட்டுமல்ல, அத்துடன் சரியான நேரத்தில் உரிய வல்லுனர்களின் அறிவைப்பெறுதல், பெரியோர்களின் செல்வாக்கு, களப்பணிக்கான உடல் உழைப்பு என பல வகைகளில் திரட்ட வேண்டி உள்ளது. அதாவது யார் யாரிடம் என்ன இருக்கிறதோ அவற்றைச் சேகரிப்பதே ஆகும். இத்தகைய ஆதாரங்களை திரட்டுவது என்பது எளிதான பணி அல்ல. திரட்டுவோர்களிடையே சுயநலமில்லாத உழைப்பும், நம்பகத்தன்மையும் உள்ளபோது தான் இது சாத்தியமாகிறது. இவ்விதம் செயல்பாடுகள் சிறப்பாக அமையும் போது தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் காலப் போக்கில் உறுப்பினர்களிடையே மரியாதையையும், செல்வாக்கையும் பெறுகின்றனர். எந்த ஒரு அமைப்பிலும் உறுப்பினர்கள் தங்கள் தலைவர் செல்வாக்குமிக்கவராக இருப்பதையே விரும்புகின்றனர். இதுவே பரந்த மனப்பான்மை.

ரெட்டி என்பது குலம் மட்டுமன்று, பதவி மற்றும் தகுதி என வரலாற்று வல்லுனர்கள் கூறுவது உண்டு. பண்டைய காலங்களில் கிராமங்களில் வரி வசூல், நிர்வாகம், கிராமத்திற்கு வெளியே தொடர்பு என பல செயல்பாடுகளின் மையமாக ரெட்டிகள் இருந்து வந்துள்ளனர். உங்கள் மொபைல் மூலம் சமூக வலைதளமான 'யூடியூப்'க்குள் சென்று அலசி பாருங்கள். இச் செய்திகளைக் காணலாம்.

சமூக, பொருளாதார மற்றும் அதிகார கட்டமைப்பு மாறிவிட்ட இன்றைய சூழலிலும் ரெட்டி இன மக்கள் பொது நல தொண்டில் முடிந்த அளவிற்கு ஈடுபடுகின்றனர். இது இக்குலத்தினுடைய மரபுப்பண்பு. இந்த மரபு பண்புகளைப் பெற்றிருக்கின்ற நம் இனத்தில் செல்வந்தர்கள் சிலர் ஆங்காங்கே ரெட்டி சங்கங்களில் தங்கள் ஈடுபாட்டினை காட்டி வருகின்றனர். தங்களுடைய சொந்த தொழில் அமைப்புகளின் நிர்வாகத்தை கவனிக்க நேரம் இல்லாத சூழலிலும் சங்க அமைப்புகளில் சேவை செய்ய முன்வருவது பாராட்டுக்குரியது. இவர்களிடம் உள்ள பொது அறிவு, செல்வம், செல்வாக்கு ஆகியவை சங்க நடவடிக்கைகளுக்குப்பயன்படுகின்றன. இத்தகைய புரவலர்களுடன், செயல்வீரர்களும் இணைந்து களத்தில் இறங்கி செயல்படும்போது சங்கங்களின் வளர்ச்சி மற்றும் சேவைப்பணிகள் சிறப்பாக

அமையும்.

சங்கங்களின் வெற்றிக்கு தலைவர்கள் உறுப்பினர்களையும், உறுப்பினர்கள் தலைவர்களையும் சரியாக புரிந்துக்கொள்ளுதல் அடிப்படையானது. மாறிக்கொண்டே இருக்கும் சூழலுக்கேற்ப செயல்பாடுகளை மாற்றி அமைப்பதும் வெற்றிக்கு அவசியம்.

சங்கங்கள் பொதுகோரிக்கைகளுக்கு தான் பாடுபட வேண்டும் என்னும் நியதி உள்ள போதிலும், இன்றைய காலக்கட்டத்தில் பாதிப்புக்கு உள்ளான தனிநபர்களுக்கும் உதவி செய்ய வேண்டியது தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்பாகிறது. ஏனெனில் பயனாளிகள் பயன் பெறும் அளவுகோல் காலப்போக்கில் மாறி வருகிறது. உத்தமர் ஓ.பி.ஆர் காலம் வேறு, இன்றைய காலம் வேறு.

இவ்விதம் திறன்களையும், தகவமைப்புக் களையும் வளர்த்துக் கொள்ள ஏதுவாக ஆங்காங்கே ஆர்வமுள்ள இளம் சங்கவாதி களுக்கு 'ஒரு நாள் பயிற்சி பட்டறைகளை' (One day Workshops) மண்டல/மாவட்ட அளவில் ஏற்பாடு



செய்யலாம். இதனால் நேர்மறையான வழிகாட்டுதல் முறைகளைக் கற்று நிச்சயம் பலம் பெறுவார்கள்.

இன்றைய விழுதுகளாகிய இளைஞர்களே! நாளைய ஆலமரங்களாக வளருங்கள், பலம் பெறுங்கள். சமுதாயத்தை நல்வழியில் நடத்தி, வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லுங்கள். நல்வாழ்த்துகள்.

R.இராஜசேகரன்–விழுப்புரம்.

# நெ.1 டோல்கேட் ரெட்டி நலச் சங்கம்






திருச்சி மாவட்டம் நெ.1 டோல்கேட் ரெட்டி நலச் சங்கம் சார்பில் கடந்த அக்டோபர் 5, 2024 அன்று உத்தமர் கோவிலின் எதிர்ப்புறம் உள்ள மண்டபத்தில் புரட்டாசி மாதம் மூன்றாம் சனிக்கிழமையை முன்னிட்டு நீர்மோர் பானகம் வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் புராணப் பெயர் கொண்ட பிச்சாண்டார் கோயில் உத்தமர் கோயில் என அழைக்கப்படுகிறது. இதற்கு திருக்கரம்பனூர் என்கிற பெயரும் உண்டு. இக்கோயிலில் பெரு–மாள், சிவன், புருஷோத்தமன் மூலவர்களாக குடிக் கொண்டுள்ள இத்தலம் ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்பு சோழர்களால் அமைக்கப்பட்டது.

பெரும்பாலும் வைணவர்களான ரெட்டியார்கள் இத்தலத்தில் சிறப்பு வழிப்பாட்டை கொள்வது இங்கு வாடிக்கையாக உள்ளது. இங்கு உள்ள நெ.1 டோல்கேட் ரெட்டி நலச் சங்கம் ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் மூன்றாம் சனிக்கிழமை அன்று சிறப்பு பூஜையும், அன்னதானம், நீர்மோர் உள்ளிட்டவற்றை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்த ஆண்டும் இதேபோல் மகளிர் அமைப்பைச் சேர்ந்த திருமதி.செல்வி, திருமதி.ரம்யா உள்ளிட்ட மகளிர் அமைப்பின் பெரும் முயற்சியால் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்களாக தலைவர் திரு.R.மதிவாணன், செயலாளர் திரு.R.மணிவண்ணன், பொருளாளர் திரு.R.இளங்கோவன், துணைத் தலைவர்கள் திரு.N.சீனிவாசன், திரு.ரெங்கராஜ் ஆகியோர் உடன் இருந்து சிறப்பான ஏற்பாட்டினை செய்திருந்தனர்.

மக்கள் பல்வேறு விஷயங்களுக்காக இங்கு பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்களின் விருப்பங்கள் நிறைவேறியவுடன் திருக்கோடி ஏற்றுகிறார்கள். 'கொடி' என்பது தமிழில் புதிய ஆடைகளுக்கு பயன்படுத்தப்படும் சொல் மற்றும் திருக்கோடி என்பது ஒரு பழங்கால விளக்கு கம்பத்தில் வைக்கப்பட்டுள்ள பெரிய விளக்கில் எண்ணெய் எரிக்கப் பயன்படுத்தப் படும் ஒரு புதிய வேட்டியாகும். இத்திருத்தலத்தில் ஒரு நாளில் பல திருக்கொடிகள் ஏற்றப்படுகின்றன. ஒவ்வொரு திருக்கொடிக்கும் பூஜையும், அன்னதானமும் உண்டு என்று பக்தக்கோடிகள் நம்பிக்கைக் கொண்டுள்ளனர் என்கிற ஐதீகமும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு பாரம்பரிய பண்பாட்டை காப்பாற்றுவதில் கவனம் செலுத்தி வரும் நெ.1 டோல்கேட் ரெட்டி நல சங்கத்திற்கு ரெட்டி மலர் சார்பில் வாழ்த்துகள்.

– தகவல் : திரு.R.இளங்கோவன், பொருளாளர்

# பருத்தி பயிரிடும் முறை

விவசாயப் பகுதி



பருத்தி ஒரு பணப்பயிர் ஆகும். பருத்தி செடி நில நடுக்கோட்டுப் பகுதியில் தோன்றிய ஒரு செடி இனமாகக் கருதப்படுகின்றது. ஆடை உற்பத்திக்கு பயன்படுவதினால் பல்லாயிரம் ஆண்டுகளாக பருத்தி விளைவிக்கப்படுகிறது.

தொழிற்புரட்சி இங்கிலாந்தில் உருவான கால கட்டத்தில் அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் பருத்தியும் ஒன்றானது. அதனால் இங்கிலாந்தில் பருத்தி தொழில் படுவேகமான வளர்ச்சி கண்டது.

தற்போது பருத்தியானது ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உட்பட உலகெங்கும் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் பருத்தி ஒரு முக்கியமான விவசாயப்பயிராக உள்ளது.

**பருத்தி பயிரிடும் முறை**

கரிசல் மண் மற்றும் வண்டல் மண், செம்மண்ணில் நன்கு வளரும் தன்மை கொண்டது.

குளிர்கால இறவை பயிராக ஆகஸ்ட்–செப்டம்பர் மாதத்திலும், கோடைகால பயிராக பிப்ரவரி–மார்ச் மாதத்திலும், மானாவாரி பயிராக செப்டம்பர்–அக்டோபர் மாதத்திலும் பயிரிடலாம்.

அடி உரமாக தொழு உரமும், தழையுரமும் பயன்படுத்தி நிலத்தை உழுது சமன்படுத்த வேண்டும் பின்பு 3 மீட்டர் இடைவெளிகளில் சிறுபாத்திகள் அமைத்து நீர் பாய்ச்சுவதற்கு வாய்க்கால் அமைக்க வேண்டும்.

பின்பு ஒவ்வொரு பாத்தியிலும் 3 செ.மீ ஆழத்திற்கு விதைகளை போதுமான இடை வெளியில் நன்றாக ஊன்றி தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மண்ணில் வளம் குறைந்த இடங்களிலும், வெயில் குறைவான இடங்களிலும் இரண்டு விதைகள் ஊன்றினால் ஏதாவது ஒன்று முளைக்கும்.

விதைத்த பத்தாவது நாள் முளைக்காமல் இருக்கும் இடத்தில் வேறு ஒரு விதையை ஊன்றலாம். இதனால் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

ஒரு மாதம் வரை 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுவது நல்லது. செடி முளைத்த பின்பு வாரத்திற்கு ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதுமானது.

மாதத்திற்கு ஒருமுறை தேவையற்ற களை களை நீக்கி தொழு உரம் அல்லது தழைச்சத்து இடுவதினால் நல்ல சாகுபடியைப் பெறலாம்.

தழைசத்துக்கள் அதிகமாக இடும் பொழுது வளர்ச்சியும் அதிகமாக இருக்கும். மேலும் நுனிகளை கிள்ளிவிடும் பொழுது பக்க கிளைகள் அதிகமாக தோன்றும். பூக்களும், காய்களும் அதிகம் காய்க்கும். பருத்தி விதைத்து 90 நாட்களுக்கு பின்பு ஊடு பயிராக உளுந்து அல்லது தட்டை பயறு ஆகியவற்றை பயிரிடலாம்.

**பருத்தியை தாக்கும் நோய்கள் & அறிகுறிகள்**

**ஆல்டர்னேரியா இலைப்புள்ளிநோய்**

சிறிய ஒழுங்கற்ற உருவம் கொண்ட திட்டுக்கள் (இலைப்புள்ளி) தோன்றும். அவற்றின் ஓரங்கள் அடர் அரக்கு நிறத்திலும் அதன் நடுப்பகுதி வெளிர் நிறத்தில் சருகு போல் ஆகி விடும்.

பாதிக்கப்பட்ட இலை காய்ந்து உதிரும். தண்டுகளில் மரு (பிளவை) தோன்றும். சில நாட்களில் காய்கள் பாதிக்கப்பட்டு உதிரும்.

**பாதுகாப்பு முறை**

வயல்களை சுத்தமாக வைக்க வேண்டும். செடியின் காய்ந்த பாகங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட அடித்தண்டுகள் (அறுவடைக்குப் பின்பு) அகற்றப்பட வேண்டும்.

**ஆந்தராக்நோஸ் (கொல்லடோடிரைக்கம்)**

வித்திலைகளில் சிறிய சிவப்பு நிற புள்ளிகள் காணப்படும். தண்டுகளில் உள்ள காயங்கள் மூலமாக நோய்க் கிருமிகள் செடிகளைத் தாக்கும். அடுத்து வளரும் நிலையில் உள்ள காய்கள் பாதிப்பிற்கு உள்ளாகும். பூஞ்சான் பஞ்சு மற்றும் விதைகளில் ஊடுருவி விடும். பூஞ்சான் பஞ்சு அரக்கு நிறத்தில் காணப்படும். இலைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும்.

பருத்திக் காய்கள், சிறிய குழி போன்ற சிவப்பு நிற புள்ளிகளுடன் காணப்படும். நன்றாக பாதிக்கப்பட்ட விதைகள் முளைக்கும் திறனை முழுவதுமாக இழந்துவிடும்.

**தடுக்கும் முறைகள்**

நீர் தேக்கத்தை வயல்களில் தடுக்கவும். பாதிக்கப்பட்ட செடிகளின் மீதங்களை கண்டிப்பாக அகற்றிவிட வேண்டும்.

**சாம்பல் நோய்**

முதிர் நிலையை அடைந்து கொண்டிருக்கும் செடிகளை இந்நோய் தாக்கும். முதிர் இலைகளில் ஒழுங்கற்ற சிறிய புள்ளிகள் தோன்றும்.

பாதிக்கப்பட்ட செடிகளை அழித்திடல் வேண்டும். தொடர்ச்சியாக பருத்தியை பயிரிடக் கூடாது.

### வாடல் நோய் ஃப்யூசேரியம் வேஸின்ஃபெக்டம்

எல்லா வளர் நிலைகளிலும் இந்நோய் பாதிக்கும். வித்திலைகள் பழுப்பு/அரக்கு நிறத்தில் காணப்படும். இலைகள் நீர்ச்சத்தினை இழந்து வாடி பின் உதிரும்.

ஆணிவேர் குன்றிய வளர்ச்சி காண்பிக்கும். கிளை வேர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும். திசுக்கள் கருமையடையும். கரும்கோடுகள் காணப்படும்.

இலைகள் ஓரங்களிலிருந்து வெளிர ஆரம்பிக்கும். வாடல் முழுவதுமாக அல்லது பகுதியாக தோன்றும்.

### கட்டுப்பாட்டு முறைகள்

எதிர்ப்பு சக்தி கொண்ட பயிர்களை வளர்க்க வேண்டும். நிலத்தில் அதிகப்படியான நீரை வடித்திட வேண்டும். மூன்றிலிருந்து நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பயிர் சுழற்சி செய்ய வேண்டும். பயிர் அறுவடைக்கு பின்பு பயிர் மீதங்களை அகற்றிட வேண்டும்.

பயிர் வரிசைகளில் 50 கிலோ தொழு உரத்தில் கலக்கப்பட்ட 2 கிலோ டிரைக்கோடெர்மா கலவையை இட வேண்டும். இதுநோய் தடுப்பிற்கு உதவும். கலப்புப்பண்ணையம் செய்தல் இந்நோய் தாக்குதலைக் குறைக்கும்.

சாம்பல் சத்து உரமிடுதல் இந்நோயை தவிர்க்கும். தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உரம் அதிகமானால் இந்நோய் தாக்குதலை அதிகரிக்கும்.

### வேர் அழுகல் நோய் (ரைசாக் போனியா படாடிகோலா)

செடிகள் திடீரென வாடிவிடும். இலைகள் பழுத்து, காய்ந்து விடும். பாதிக்கப்பட்ட செடிகளை சுலபமாக பிடுங்கி விடலாம்.

ஆணிவேர் அழுகிவிடும். சில கிளைவேர்கள் மட்டுமே செடியைத் தாங்கும். இதனால் செடிகளை சுலபமாக பிடுங்கி விடலாம்.

**வேர் நுனிகள் வழவழப்புடன் காணப்படும்.**

பருத்தி செடிகளுக்கு இடையில் கல்லுப்பயிறு–நரிப்பயிறு எனும் ஊடுபயிரை பயிரிடலாம். இப்பயிர் நிழலைத்தந்து அதிக ஈரப்பதத்தைத்தக்க வைக்கும். தட்பவெப்ப நிலையைக் குறைக்கும். இது நோய் தாக்குதலை மட்டுப்படுத்தும். தட்பவெப்ப நிலை மிதமாக இருக்கும் பொழுது விதைக்க வேண்டும்.

தொழுவுரத்தில் (50 கிலோ) டிரைக்கோடெர்மா வினை (2 கிலோ) கலந்து பயிர் வரிசைகளில் இடவும்.

### பருத்தியின் பயன்கள்

பருத்தியின் இலையும் மொட்டும் மருத்துவ குணங்கள் கொண்டவை. இவற்றை அரைத்து பசும்பாலில் கரைத்து உட்கொண்டால் ரத்த நோய்கள் நீங்கும்.

பருத்தியின் விதைகள் பருத்தி கொட்டைகள் என்று அழைக்கப்படும். இது கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.


## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

தொலைபேசி : ..................................................................

நான் இத்துடன் ............. வருட சந்தா/15 வருட சந்தா தொகை ரூ............. டி.டி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI
BANK NAME : INDIAN BANK
BRANCH : JAFFERKHANPET,
A/C. NO. : 7105534900
IFSC CODE : IDIB000J019

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA



NEC Special Features

- nirf Rank - 169
- ARIIA 2021 Band - Excellent, 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council 4 STAR RATING
- DST - FIST Sponsored
- NAAC Accredited with A Grade
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA CONSULTANCY SERVICES, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, TESSOLVE, wipro, DATA PATTERNS, MISTRAL, Brakes India Private Limited, Capgemini, Centizen, ELITE CONSTRUCTIONS, embedUR, vuram, HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


COURSES OFFERED

UG: B.A. - English; B.Com. - Professional Accounting; B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG: M.Sc. - Computer Science; M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7446 | 22.06.1999 | B.Com. M.Com | சித்திரை | —— | —— |
| 2 | G 7447 | 28.12.1999 | MBBS | உத்திரம் | Duty Medical Officer | Rs.50,000/- PM Stipend |
| 3 | G 7448 | 22.04.1999 | MBBS | புனர்பூசம் | Doctor | —— |
| 4 | G 7449 | 30.01.2001 | BCA. MBA | ரேவதி | —— | —— |
| 5 | G 7450 | 26.06.2001 | B.Tech. ME | பூரம் | —— | —— |
| 6 | G 7451 | 04.12.1997 | B.Tech. MBA | திருவோணம் | —— | —— |
| 7 | G 7452 | 12.12.1997 | BPT. MPT | கிருத்திகை | Own Clinic | —— |
| 8 | G 7453 | 24.02.2000 | BE | சித்திரை | Software Developer | —— |
| 9 | G 7454 | 29.06.2000 | B.Arch. MUD | கிருத்திகை | Canada | —— |
| 10 | G 7455 | 12.07.1997 | BE | அஸ்தம் | Tech Mahindra | Rs.9 Lakhs / PA |
| 11 | G 7456 | 06.08.1999 | B.Com. MBA | கார்த்திகை | Senior Resolution Coordinator | Rs.40,000/- PM |
| 12 | G 7457 | 13.02.2001 | B.Designing | சித்திரை | Product Designer | Rs.4.5 Lakhs / PA |
| 13 | G 7458 | 30.01.1991 | MS | பூசம் | —— | —— |
| 14 | G 7459 | 06.03.1996 | B.Tech.MS.Ph.D | உத்திரம் | Germany | —— |
| 15 | G 7460 | 08.07.1991 | B.Tech. | கிருத்திகை | IT Company | Rs.40,000/- PM |
| 16 | G 7461 | 14.04.2000 | M.Sc. B.Ed. | மகம் | Private School Teacher | Rs.12,000/- PM |
| 17 | G 7462 | 24.08.1993 | B.Tech. | விசாகம் | Software Tester | Rs.8 Lakhs / PA |
| 18 | G 7463 | 01.12.2001 | B.E. | ரோகிணி | IT Company | Rs.7 Lakhs / PA |
| 19 | G 7464 | 20.10.1999 | B.Com. MBA | சதயம் | Senior HR Executive | Rs.6 to 7 Lakhs / PA |
| 20 | G 7465 | 09.09.2001 | B.E. | கிருத்திகை | IT Company | Rs.4 Lakhs / PA |
| 21 | G 7466 | 29.05.1999 | B.E. | அனுஷம் | Develops Engineer | Rs.40,000/- PM |
| 22 | G 7467 | 19.04.2002 | B.Sc. | திருவாதிரை | —— | —— |



## ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகன்


| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 11236 | 26.06.1993 | BBA | உத்திரம் | Grocery Shop | Rs.50,000/- PM |
| 2 | B 11237 | 15.10.1993 | BE | சித்திரை | Manager | Rs.8 Lakhs / PA |
| 3 | B 11238 | 11.08.1998 | B.E. | உத்திரட்டாதி | Blue Metals | Rs.3 Lakhs / PM |
| 4 | B 11239 | 13.12.1992 | B.Com. MBA | பூசம் | MSC Shipping Company | Rs.40,000/- PM |
| 5 | B 11240 | 21.02.1993 | B.E. MBA | சதயம் | Business Manager | Rs.11-12 Lakhs / PA |
| 6 | B 11241 | 30.08.1995 | B.Arch. MUP | சித்திரை | Australia | Rs.44 Lakhs / PA |
| 7 | B 11242 | 17.03.1993 | MS | உத்திராடம் | Australia | Rs.36-39 Lakhs / PA |
| 8 | B 11243 | 19.02.1988 | BCA. MBA | பூரட்டாதி | Private Company | —— |
| 9 | B 11244 | 19.08.1995 | BE. MBA | ரோகிணி | Doc. Executive | Rs.4 Lakhs / PA |
| 10 | B 11245 | 12.12.1994 | B.E. ME. MBA | ரேவதி | Power System Engineer | Rs.10 Lakhs / PA |
| 11 | B 11246 | 13.09.1999 | B.Com. MBA | சுவாதி | Global Service Executive | Rs.3.6 Lakhs / PA |
| 12 | B 11247 | 23.07.1992 | D.E.E.E | பரணி | Proprietor, Surya Travels | Rs.6 Lakhs / PA |
| 13 | B 11248 | 15.07.1982 | M.Sc. PGDAC | அஸ்வினி | Real-estate Business | Rs.5 Lakhs / PA |
| 14 | B 11249 | 03.06.1992 | B.Sc.MBA | திருவாதிரை | Sr.SAP Consultant | Rs.1.29 Lakhs / PM |
| 15 | B 11250 | 20.08.1996 | B.E | சித்திரை | Software Engineer | Rs,42,000/- PM |
| 16 | B 11251 (Divorcee) | 01.05.1993 | B.E. MS | மகம் | USA | Rs.60 Lakhs / PA |
| 17 | B 11252 | 06.11.1996 | B.Com. MBA | பூரம் | Central Govt.Job | Rs.5 Lakhs / PA |
| 18 | B 11253 | 11.02.1994 | D.C.E | அவிட்டம் | Transport Business | Rs.12 Lakhs / PA |
| 19 | B 11254 | 13.05.1997 | B.E. MS | பூசம் | USA | Rs.50 Lakhs / PA |
| 20 | B 11255 | 02.08.1998 | C.A. | அனுஷம் | KVM Associates | Rs.6 Lakhs / PA |
| 21 | B 11256 | 17.04.1995 | DEEE | விசாகம் | BMS | Rs.25,000/- PM |
| 22 | B 11257 | 04.07.1995 | B.E. | உத்திரம் | Engineer | Rs.35,000/- PM |
| 23 | B 11258 | 23.11.1992 | ME | சுவாதி | Hitachi Group | Rs.40,000/- PM |

# R.S. INDUSTRIES


103, MUNIYAPPAN KOVIL THOTTAM, SATHY ROAD, GANAPATHY, COIMBATORE - 641 006

PH: 98422 17444, 98422 53843







REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.